# சுடர்

கலை
லக்கியத்
திங்கள்
இதழ்



ஐப்பசி 1981

விலை
ரூபா
2-00

# வாசகர் வாய்மொழி

## 'முத்திரை' குத்தும் எழுத்தாளர்!

"புரட்டாதி 81" சுடர் கண்டேன்! பாராட்டுக்கள் பல! ஏன் எழுதுகிறீர்கள் எனக் கேட்டால் இதற்காகத்தான் எழுதுகிறோம் என முத்திரையிட்டுக் கொண்டு எழுதும் எழுத்தாளர்களில் ஒருவரான—ஆற்றல்மிக்க திரு. கே. ஆர். டேவிட் அவர்களின் பேட்டியை தந்தமைக்கு நன்றிகள் பல! சுடர் தனது இலக்கியப்பணியில் தொடர்ந்தும் வீறு நடையோடு பவனிவர வேண்டும் என்பதே என் அவா,

இலக்கிய அன்பன், திருமலை இரா. செல்வம்

## தங்கப் பேழையே வாழி

உறங்கிக்கிடக்கும் தமிழர்தம்
உறக்கம் கலைந்து எழுந்து வந்து
இரக்கமற்ற ஈனர்களின் — கொடும்
இன்னல்கள் யாவையும் ஒழித்து விட
மறக்காது தமிழர்மனை தேடி — வரும்
மங்களச் சுடரே வாழி நீ!

தமிழராய்ப் பிறந்தும் தமிழர்க்கே —
தரித்திரம் சேர்க்கும் தலைவர்களை
உமிழ்ந்து வாய் எச்சிலை தூ... என்று
ஊதிடும் நக்கீரரும், கரிகாலரும், அரியும்
தமிழர்க்கு தலைவாசல் தருகின்ற —
'தங்கப் பேழை'யே வாழிய நீ.

தமிழ் அமுதன், எல்ல

## நிறைவைத்த பதில்கள்!

புரட்டாதி சுடரின் புதுமை அரியின் மனம் விட்டு சில வார்த்தைகளில் அவதார புருசரின் அப்பட்டமான புரட்டல் அவதாரங்கள் அத்தனையையும் அழகாக படம் பிடித்து காட்டுகிறார். அத்தோடு நித்தனையும் நிபந்தனையும் நம்தலைவர்கள் அனைவரும் பார்த்து சிந்திக்க வேண்டியவை. கரிகாலனின் பதில்கள் என்னை நிறைவைத்து விட்டது! தமிழன் ஒவ்வொருவரும் பார்க்க வேண்டிய தரம் மிக்க அறிவுச் சுடரே! உன் பணி வளர என் இதயபூர்வ நல்லாசிகள்,

தமிழ்தாஸன், நியூபக், எல்ல.

## 'இங்கிலீசு' வேண்டாம்

இலக்கியத்திங்களாம் சுடரே
இங்கிலீஷ் பதம் கலக்கின்றாயே நீ
இனிய தமிழ்ப்பதங்கள் இல்லாமலா நீ
இப்படி கவிதையிலும், கதையிலும், கவிச்சரத்திலும்
இங்கிலீஷ் கலந்து இங்கிதமடையச் செய்கிறாய் நீ
இந்தக் கரிகாலர் கூட இங்கிலிஷில் பதில் கொடுக்கிறாரே
இனியாவது இக்குறைபாட்டைத் தவிர்ப்பாயாக நீ

இ. இரத்தினகுமார், வட்டுக்கோட்டை

## உள்ளம் நிறைந்த பாராட்டுக்கள்!

இதழின் வண்ணமும் அண்ணாவின் அட்டைப் படமும் வெகு பிரமாதம். ஜெயவர்த்தனீஸ்வரரின் அவதாரங்களையெல்லாம் மிகவும் திறமையாகவும், தைரியமாகவும் மனம் விட்டுத்தான் விளாசியுள்ளார் அரி. தமிழ்ப்பிரியாவின் பரிசுக் கதையோடு மற்றும் கதைகள், புதுக் கவிதைகள், கவிச்சரங்கள் அனைத்திற்கும் என் உள்ளம் நிறைந்த பாராட்டுக்கள்.

அ. தயாபரி. கொக்குவில் மேற்கு,

## 'வாகரை'யாரின் நினைவு வருகிறதே!

அனலையாரின் காவியம் வாகரையாரை நினைவுபடுத்துகிறது. கவிச்சரங்கள் மலரின் முத்தாய்ப்பு. சிறுகதை ஆசிரியர் பேட்டி நல்ல அறிமுகம். மேலும் சிறுகதைகள் கவிதைகள் பிரமாதம்.

முல்லை அமுதன் கல்வியங்காடு,
யாழ்ப்பாணம்

## அற்புதம், அப்பட்டம், அருமை!

புரட்டாதி சுடர் கண்டேன். அரியாரின் மனம் விட்டு சில வார்த்தைகளில் ஜே. ஆரின் அவதாரங்களை அற்புதமாக அப்பட்டமாக அருமையாக சித்திரித்து இருக்கின்றார். அவருக்கு என்னுடைய சபாஷ். ந. புஸ்பகுமார் எழுதிய இரு சிறு கவிதைகள் சிறப்பானவை சிந்தனையைத் தூண்டியன.

கனகபிரதீபன், கேணியடி, கொக்குவில்.

சுடர்
CHUDAR
(கலை இலக்கியத் திங்களிதழ்)

ஆசிரியர்: கரிகாலன் துணை ஆசிரியர்: அரி
வள்ளுவராண்டு: 2012
சுடர்: 7
ஒளி: 7
ஐப்பசி 1981
தொடக்கம்: சித்திரை 1975

வெளியீடு:
சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
194 ஏ, பண்டாரநாயக்க மாவத்தை
கொழும்பு—12.
தொலைபேசி: 23411

# கவிக்குயிலே கண்ணுறங்கு!

கண்ணதாசன் — புதுமைக்கவி பாரதியினதும் புரட்சிக்கவி பாரதிதாசனதும் பாரம்பரியத்துக்கு வழியுரிமை கோரிவந்த வரகவி அவன் தூங்கிவிட்டான்.

எண்ணச் சிறகடித்து வண்ணத்தமிழ்ச் சோலையிலே பாடிப் பறந்திட்ட பசுங்குயில் மீளாத்துயில் கொள்கிறது.

ஆயிரம் கவிமலர்கள் கொத்துக் கொத்தாகப் பூத்துப் பொலிந்திட்ட பாச்சோலை வாடி வதங்கிக் கிடக்கிறது.

இலக்கிய உலகு இடும்பைகூர் நெஞ்சத்துடன் ஏங்கித் தவிக்கிறது. அந்தத் தவிப்புக்கு அர்த்தமுண்டு.

கண்ணதாசன் என்ற கவிக்குயிலின் பங்களிப்பு பரவலானது— பன்முகப்பட்டது.

புதுமைக்கும் புரட்சிக்கும் வாரிசாக வரவேண்டுமென விழைந்த இக்கவிஞன் அந்த அற்புத பரம்பரையின் பக்குவங்கள் அத்தனையையும் பவித்திரமாகப் பேணினாரா? வாதத்திற்குரியதுதான்.

பாரதி—பாரதிதாசன் மட்டத்திலிருந்து படியிறங்கி, அந்தப் பாரம்பரியப் பண்புகளின் மலிவுப் பதிப்பாக அவர் மாறினார் என விமர்சிக்கப்படுவதுண்டு.

எனினும், கவிஞனின் கவித்துவத்தை யாரே மறுத்துரைத்தார்? அந்தப் புலமையிலே பூத்த வாடாமலர்களைச் சூட மறுத்தவர் யார்?

அந்த நறுந்தமிழ் நந்தவனத்தைத் தழுவிவந்த மந்தமாருதத்திலிருந்து வீசிய சுகந்தத்தை முகரமறுத்த தமிழ் மானிடன் எவன்?

கண்ணதாசன் சித்தரித்த கவிதைகள், புனைந்த காவியங்கள், கதைகள், கட்டுரைகள், திரைப்படப் பாடல்கள், உரையாடல்கள், இத்தியாதி, கவிஞனின் தனித்துவமான முத்திரையை தாங்கிநின்றன.

சிறப்பாக, திரைப்படப் பாடல்களில் திந்தமிழின் ஆதிக்கத்தை நிலைநிறுத்தியவர்—தமிழ் இலக்கியங்களின் நயங்களை இலங்கவைத்தவர்—இலக்கிய, இதிகாச நாயகர்களை உலவ வைத்தவர் கவிஞர்.

காலதேவன் அவசரப்பட்டு விரித்துப்போட்ட கட்டிலிலே கவிஞன் அசதியோடு தூங்குகிறான். ''பூமியில் நிலையாய் வாழ்ந்தவர் யாரடா?'' என்று புரிந்துகொண்டு கேட்டவனுயிற்றே. கேள்விக்கு கவிஞன் மட்டும் விதிவிலக்கா என்ன? எனவே, தூங்கட்டும்!

# தமிழணங்கே

## ஊடாடி

பூச்சுமந்த தலையோடு எழிலே கொஞ்சும்
பொன் சுமந்த வதனத்தாள் பூத்து நின்றுள்!
"நாச்சுமக்கும் தமிழ் வார்த்தை நாலே வார்த்தை
நவிலாளா" என்றேக்கம் என்னைத்தாவ,
கூச்சமது கொண்டநங்கை நாணத்தாலே
குறுகுறுக்கும் விழியாலே பேசி என்னைப்
பாச்சுமக்க வைத்தாளே அட்டா! அந்தப்
பாக்கியத்தை மறப்பேனு தமிழ ணங்கே?

கோடானு கோடிநிகர் செல்வ மென்ன
குப்பைதான் உன்நளினச் சிரிப்பு முன்னுல்!
ஆடாத உள்ளமெலாம் ஆடும்! பச்சை
அரிசிப்பல் வரிசையது திறந்தா யானுல்!
மூடாமல் என்பேனு ஓடிக் கொண்டே
மூச்சோயும் வரையுந்தன் உறவி னூடே
ஊடாடல் செய்திடவே வைத்தாய்! எந்தன்
உயிருக்கு நிகரான தமிழ ணங்கே!

சிதையோடு உடலெரிந்து போனு லென்ன
சிதறுண்டு போய்விடும் காண்? காதல் மட்டும்
கதையாகிக் கவியாகிக் கருத்து மாகி
காலத்தை எஞ்ஞான்றும் வென்று வாழ,
விதைதூவி அரசோச்ச புலியைப் போன்ற
வீரர்கள் மைந்தர்கள் ஆன போது
புதையுண்டு போகாது எண்ணம்! நாளை
புலர்கின்ற நாள் நமதே தமிழ ணங்கே!

[இக்கவிதையை யார்த்தவர் கவிஞர் எம். பி. சிருக்டீன் ஆவார். தற்போது சவூதி அரோபியாவில் கடமையாற்றுல் இந்த அன்பர் 'சுடர்' மீதும் தமிழ்மீதும் தீராத காதம் கொண்டவர்]

# சந்திப்பு!



## ப. நெடுமாறனுடன்.

**சந்தித்தோர்:**

லாதிஸ் லோகநாதன்.
கே. வி. தவராஜா.

தமிழ் ஈழ மக்களின் பிரச்சினைகளில் தீவிர அக்கறையும் அனுதாபமும் கொண்டவர் தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ் தலைவர் திரு. ப. நெடுமாறன் அவர்கள். இவர் எமது பிரச்சினைகளில் வரையறைவான கருத்துக்களை உடையவர். இதனால் கேள்விகளுக்கு தயக்கமின்றிப் பதில் தருகிறார். திரு. நெடுமாறனை இம்மாதம் 6-ம் தேதி காலை 11. 30 மணிக்கு கொழும்பில் எதிர்க்கட்சி முதல்வர் திரு. அமிர்தலிங்கம் அவர்களின் விடுதியில் 'சுடர்' சார்பில் எனது இளவல்கள் கே. வி. தவராஜா (இளம் வழக்கறிஞர்), லாதீஸ் லோகநாதன் (சட்ட மாணவன்) ஆகியோர் பேட்டி கண்டனர். காலையில் நீதிமன்றில் நிற்க வேண்டியிருந்ததால் பேட்டியை திரு. நெடுமாறனுடன் தொலைபேசியில் ஒழுங்கு செய்துவிட்டு தாமதித்தே இச்சந்திப்பில் கலந்து கொண்டேன். பேட்டியை ஒழுங்கு செய்யப் பெரிதும் உதவியவர் எதிர்க்கட்சி முதல்வரின் பாரியார் திருமதி மங்கையர்க்கரசி அம்மையார் அவர்கள். திரு. நெடுமாறனுக்கும் திருமதி அமிர்தலிங்கம் அம்மையாருக்கும் சுடர் சார்பில் நன்றி கூறுகிறோம்

— ஆசிரியர்.

கே: தாங்கள் இங்கு வருகை தந்ததன் மூலம் இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்சினைகளை எந்த அளவுக்கு புரிந்து கொண்டீர்கள்?

ப: இலங்கையில் வாழ்கிற தமிழ்மக்களின் போராட்டங்களையும், அவர்கள் மத்தியில் உள்ள எழுச்சியினையும், பரிபூரணமாக அறிந்து கொள்ள இந்த வருகை உதவியுள்ளது. இலங்கைத் தமிழ்மக்களுக்கு இழைக்கப் பட்ட கொடுமைகளை தெரிந்து கொள்ளவும், நேரில் விபரங்களை முழுமையாக அறிந்து கொள்ளவும், இந்தச் சுற்றுப் பயணம் உதவியளிப்பதாக இருந்தது. தமிழர் விடுதலைக்கூட்டணியின் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம், மற்றும் அந்த இயக்கத்தின் மற்றத் தலைவர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், மாவட்ட அபிவிருத்திச்சபைத் தலைவர்கள், நகரத் தலைவர்கள் ஆகிய அனைவரையும் சந்தித்துப்பேசினேன். இலங்கை அமைச்சர் திரு. தொண்டமான், இந்தியத் தூதுவர் திரு. ஏபிரஹாம், மற்றும் இலங்கைத் தொழிற் சங்கங்களைச் சேர்ந்த பல தலைவர்கள் ஆகியோரையும் சந்தித்தேன். யாழ்ப்பாண பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், மற்றும் பல்வேறு கல்லூரிகளின் ஆசிரியர்கள், மாணவர்கள் மாணவிகள் ஆகியோரையும் சந்தித்தேன். இப்படி இலங்கையில் வாழ்கிற தமிழ் சமுதாயத்தின் பல்வேறு பிரிவினரையும் சந்தித்து அவர்களின் பிரச்சினைகளை விசாரித்தறிந்தேன். பத்திரிகையாளர்கள், செய்தியாளர்கள் ஆகிய பலதரப்பட்டோரையும் சந்தித்ததன் மூலம் இங்குள்ள தமிழர்களின் பிரச்சினையைப் பூரணமாக அறிந்துகொண்டேன்.

**"தனி நாட்டைத் தவிர வேறு வழி இல்லை"**

# புது வாத்தியார்!

(சிறுவர் விருந்து.)

டண்......டண்......டண்......

மணி அடித்து ஓய்ந்தது.

மாணவர்கள் எல்லோரும் அவரவர் வகுப்பில் நுழைந்தனர். ஆசிரியரும் அவசர மவசரமாக இங்கு மங்கும் நடந்தனர்.

ஒரு வகுப்பில் மட்டும் அமைதியில்லை.

தலைமை ஆசிரியர் கோபத்துடன், பிரம்பும் கையுமாக, அந்த வகுப்பில் நுழைந்தார். மாணவர் அவர் வந்ததைக் கூட கவனியாமல் கூச்சலும், கும்மாளமும் போட்டனர். அவர்களுக்கு மத்தியில் ஒரு பெரிய பையன் பெரிய குரலில் கத்திக் கொண்டிருந்தான்.

தலைமை ஆசிரியருக்குப் பொல்லாத கோபம் வந்தது. பெரிதாக கத்திய அந்தப் பெரியவனிடம் போய், அவன் காதைப் பிடித்துத் தள்ளிக்கொண்டு, தனது அறைக்குப் போனார். அங்கே, ஒரு மூலையில் அவனை நிற்கச்சொன்னார். 'அசையக்கூடாது! பேசக்கூடாது' பேசினால், முதுகை உரித்து, விடுவேன் என்று பிரம்பை காட்டினார்.

அவன் நடுங்கியபடி பேசாமல் நின்றான். தலைமையாசிரியர் தன் வேலைகளை கவனிக்கலானார். ஐந்து நிமிடங்கள் சென்றன. ஒரு சிறு பையன் தலைமை ஆசிரியரின் அறைக் கதவுக்கு அருகில் வந்து நின்றான். சேர்......சேர்...... என்றான்.

தலைமையாசிரியருக்கு இன்னும் கோபம் தணியவில்லை "என்னடா........." என்றார்.

"எங்கள் புது வாத்தியாரை கொஞ்சம் வெளியிலே விடுகிறீர்களா? சேர்........." என்றான் பணிவுடன்.

தண்டனைக்கு உள்ளான "பெரிய பையன்" (புது வாத்தியார்,) அன்றுதான் வந்தவர், என்பது அப்போதுதான் தெரிந்தது, தலைமையாசிரியருக்கு.

— **கண்ணன்** - தென்மட்டுவில்.

---

கே: இலங்கைவாழ் தமிழ் மக்கள் தனி நாடு ஒன்றை அமைத்துக் கொள்வதுதான் தங்கள் பாதுகாப்புக்கு உகந்ததென, நம்புவதையும் நீங்கள் அறிந்திருப்பீர்கள். அதைச் சரியான ஒரு முடிவென நீங்கள் கருதுவீர்களா?

ப: இவ்வளவு கொடுமைகளின் மத்தியில், சுதந்திரத் தமிழ் ஈழம் காண்பதைத் தவிர வழியில்லை என்ற நிலைக்கு அவர்கள் உந்தித் தள்ளப்பட்டிருக்கிறார்கள்.

கே: அவர்களின் அவ்வாறான முடிவு நியாயமானதென்றும் நீங்கள் கருதுகிறீர்களா?

ப: இந்தச் சூழ்நிலையில் அதைத்தவிம அவர்கட்கு வேறு வழியில்லை. தங்கள் இனத்தை, தங்கள் மொழியை, தங்கள் பாரம்பரியம் பண்பாடுகளைக் காத்துக் கொள்வதற்கு அவர்களுக்கு வேறு வழி இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

கே: இப்போது இலங்கைக்கு வருகை தராதிருந்தாலும், நீங்கள் கூறும் இதே கருத்தைத் தமிழகத்திலிருந்தும் கூறியிருப்பீர்களா?

ப: ஓரளவிற்கு இங்குள்ள நிலையை பத்திரிகை வாயிலாகவும், இங்குள்ள மக்கள் வாயிலாகவும் அறிந்திருந்தாலும் கூட, இங்குள்ள பிரச்சினையின் முழு வடிவத்தையும், மக்களின் துயரங்களையும், பகிர்ந்து கொண்டு அவர்களுடன் விவாதித்து, அறிந்தபோது தான், பிரச்சினையின் முழு வடிவமும் திட்டவட்டமாகவும், தெளிவாகவும் புரிந்தது.

கே: ஈழத்தமிழ் மக்கள் தமிழ்நாடு உட்பட இந்திய அரசியல் நிலைமைகளை தெளிவாகப் புரிந்து வைத்திருக்கும் அளவுக்கு, இங்குள்ள தமிழ் மக்களின் பிரச்சினைகளை அங்குள்ள இளைய தலைமுறையினர் புரிந்து கொள்ளவில்லையோ என்றுதான் எண்ணத் தோன்றுகிறது. தமிழ்நாட்டு சஞ்சிகைகளைப் பார்க்கும்போது, (உதாரணமாக 'துக்ளக்' 1-9-81 இதழின் தலையங்கத்தை குறிப்பிடலாம்) இந்த நினைப்பு நெருடுகிறது. உண்மையில், மூதறிஞர் ராஜாஜி, அறிஞர் அண்ணா, ஓரளவுக்கு ம. பொ. சி. அவர்கள், இங்குள்ள எமது பிரச்சினைகள் பூதாகரமாக உருவெடுக்க முன்னரே அங்கு நிலைமையை உணர்ந்திருந்தார்கள். அவ்வாறான புரிந்துணர்வு இன்று இல்லையோ என்ற எண்ணம் எங்களுக்கு ஏற்படுகிறதே.?

**'தமிழ்நாட்டில் பதைப்புணர்ச்சி ஏற்பட்டிருக்கிறது''**

ப: நீங்கள் சொல்வதில் ஓரளவுக்கு உண்மை இருக்கிறது. தமிழ்நாட்டில் உள்ள மக்கள், இந்தப் பிரச்சினையின் முழு வடிவத்தையும் முழுமையாக இன்னமும் உணர்ந்துகொள்ளவில்லை. காரணம், அங்குள்ள பத்திரிகைகள் இந்தச் செய்திகளை முழுமையாக வெளியிடவில்லை. ஆனால் ஒரு அளவுக்கு இந்தியத் தமிழ்மக்கள் இலங்கையில் உள்ள தமிழர்கள் கொடுமைப்படுத்தப் படுகிறார்கள் என்பதை உணர்ந்திருக்கிறார்கள். அதன் விளைவாகத்தான் தமிழ்நாட்டில் முன்னெப்போதும் இல்லாத வகையில் இலங்கையில் வாழ்கிற தமிழர்களுக்காக அவர்கள் மீதுள்ள அனுதாப உணர்வின் வெளிப்பாடாக, வேட்கையாக, நாங்கள் ஏதாவது செய்தாக வேண்டுமே என்ற பதைப்புணர்ச்சியும், தமிழ்நாட்டு மக்களிடம் ஏற்பட்டுள்ளது. அதன் விளைவாகத்தான், சட்டமன்றத்தில் சகல கட்சிகளும் சேர்ந்து ஏகமனதாக இலங்கைத் தமிழர்கட்கு ஆதரவாகத் தீர்மானம் நிறைவேற்றியதும், தமிழகம் தழுவிய ஹர்த்தால் நடந்ததுமாகும். இங்கு நான் கண்டு கேட்டு அறிந்தவற்றைத் தமிழகத்துக்குச் சென்று

தமிழகம் பூராவும் உள்ள மக்களுக்கு இதை எடுத்துச் சொல்லும் முயற்சியில் ஈடுபடுவேன். இதன்மூலம் இந்தப் பிரச்சினைகளை அங்குள்ள மக்கள் இன்னும் தெளிவாகப் புரிந்துகொள்ள என்னென்ன செய்ய வேண்டுமோ அதையெல்லாம் நான் செய்வேன்.

### "இந்திய சுதந்திரப் போர்க்காலத்தில் இல்லாத எழுச்சி — ஹர்த்தாலின்போது"

கே: தமிழகம் நடாத்திய மாபெரும் ஹர்த்தாலுக்குத் ஈழத்தமிழ்மக்கள் என்றும் நன்றியுடையவர்களாக இருப்பார்கள் என்பதை "சுடர்" சார்பில் தெரிவித்துக்கொள்வதுடன், நீங்கள் எடுக்கப்போகும் முயற்சியையிட்டும் உற்சாகமடைகிறோம். தமிழக அரசியல் கட்சிகள் இலங்கைத் தமிழர் பிரச்சினையில் ஏகோபித்த கருத்துடையனவாக இருந்தபோதிலும், அவற்றின் செயற்திட்டங்களில் மாறுபட்டு நிற்பதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இதைப்பற்றி நீங்கள் என்ன சொல்கிறீர்கள்.?

ப: இந்தக் குறையைப் படிப்படியாகத் தான் போக்கமுடியும். தமிழகத்தின் எந்த அரசியல் கட்சியும் இலங்கையில் உள்ள தமிழர்கட்கு ஆதரவு காட்டவேண்டிய சூழ்நிலையை தமிழ்நாட்டு மக்களின் எழுச்சி ஏற்படுத்தி உள்ளது. இது முதல்கட்ட வெற்றி ஆகும். அடுத்த கட்டமாக தமிழ் நாட்டில் உள்ள சகல கட்சிகளும், தங்களுக்குள் எவ்வளவு வேறுபாடு இருந்தாலும் அவற்றையெல்லாம் ஒதுக்கிவைத்து விட்டு, இலங்கைத் தமிழர் பிரச்சினையில் பரிகாரம் காண்பதற்கு ஒன்றுபட்டு, செயல்வடிவம் காணவேண்டியது அவசியமாகும். இது இரண்டாவது கட்டமாகும். இந்த இரண்டாவது கட்டத்தை நோக்கி தமிழ்நாடு சென்று கொண்டிருக்கிறது என நான் நம்புகிறேன்.

கே: தமிழ் மாநிலம் முழுமையாக ஏகோபித்து நடாத்திய ஹர்த்தாலைப் பின்பற்றி இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் தெரிவித்த கருத்துப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

ப: அவர் ஹர்த்தாலைத் தொடர்ந்து அபிப்பிராயம் தெரிவிக்கவில்லை; ஹர்த்தாலுக்கு முதல்நாளே அது தேவையற்றதென்று கருத்துத் தெரிவித்தார்கள். இந்தியப் பிரதமரே சொல்லியுங்கூட தமிழ் மக்கள் இதை ஏற்றுக்கொள்ளவில்லை: மாறாக, சுதந்திரப் போராட்டக் காலத்திலேகூடக் காணமுடியாத அளவுக்கு மகத்தான ஹர்த்தால் தமிழகத்தில் நடைபெற்றது. இது தமிழக மக்களின் உணர்வினை திருமதி இந்திரா காந்திக்கு தெளிவாக உணர்த்தியிருக்குமென நான் நம்புகிறேன்.

கே: எம்மில் ஒரு சாரார் பாராளுமன்ற வழிமுறைகள், ஒரு விடுதலை இயக்கத்தின் வேகத்தினை பின் தள்ளிவிடும் என்று கருதுகிறார்கள். ஆனால், மறுபுறத்தில், சனநாயக அமைப்பின்கீழ் விடுதலை கோரும் இயக்கங்களின் பிரசார இயந்திரத்துக்கு பாராளுமன்றம் ஒரு சௌகரியமான தளம் என்றும் இன்னோர் சாரார் கருதுகிறார்கள். ஒரு அரசியல் கட்சியின் தலைவர் என்றவகையில் இது பற்றி நீங்கள் ஏதும் அபிப்பிராயம் கூற முடியுமா?

ப: உங்களின் இயக்கம் ஒரு விடுதலை இயக்கம். ஒரு விடுதலை இயக்கத்தை ஒரு சார்பான கருத்துடையவர்களை மட்டுமே வைத்து நடாத்திவிட முடியாது. பல்வேறு கருத்துடையவர்களையும் ஒருங்கிணைத்து அணைத்து, அவர்களின் உதவியையும் ஒத்தாசையையும் பெற்றுத்தான் ஒரு விடுதலை இயக்கத்தை நடாத்த முடியும். பல்வேறு கருத்து மாறுபட்டவர்களையும் கூட்டி ஒன்றுபட்டு இயங்குவதில்தான் விடுதலை இயக்கத்தின் வெற்றிக்கான வழி இருக்கிறது. இந்த உண்மையை உணர்ந்து இங்குள்ள கூட்டணித் தலைமை சிறப்பாகச் செயல்படுகிறது என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது. இவ்வளவு அடக்குமுறைகளுக்கு நடுவிலும் ஈழத்திலே வாழ்கிற தமிழர்கள் ஒன்றுபட்டு நின்று, கூட்டணிக்கு தங்களது மகத்தான ஆதரவை வழங்குவதன் இரகசியமும் இதுதான். எனக்கு மகிழ்ச்சியளித்த விடயம் தமிழ் ஈழ மக்கள் இந்தக் கொடூரமான அடக்குமுறைகளுக்கு மத்தியிலும் தங்கள் மனவுறுதி குலையாமலிருப்பதுதான். - (" They are not demoralised ") இது ஒரு நல்ல ஆரோக்கியமான அம்சம். இத்தகைய மக்களும், உறுதிகுலையாத விடுதலை இயக்கமும் நிச்சயமாகத் தங்கள் குறிக்கோளை அடைவதில், வெற்றிபெறுவார்கள் என்பதில் சந்தேகம் இல்லை.

கே: எங்கள் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் உலகநாடுகளின் அனுதாபம் உதவியளிக்க கூடும் என கருதுகிறீர்களா?

ப: நிச்சயமாக; உங்கள் பிரச்சினை தொடர்பாக உலகநாடுகளின் ஆதரவைத் திரட்டுவதில் நீங்கள் ஈடுபடுவது முக்கியமாகும். தமிழ் நாட்டு மக்களின் நம்பிக்கையை நீங்கள் பரிபூரணமாகப் பெற்றுவிட்டீர்கள். உலகநாடுகளிடம் இருந்து, வரக்கூடிய 'சர்வதேச நிர்ப்பந்தம்' (International Compulsion) உங்கள் குறிக்கோளைத் துரிதப்படுத்தும். அப்படியான சூழ்நிலை வருவது உங்களுடைய விடுதலைப் போராட்டத்துக்கு பெரிதும் துணை செய்யும்.

கே: ஈழத் தமிழ் மக்களின் பிரச்சினை, 1977 பொதுத் தேர்தலில் தமிழ் ஈழக்கோரிக்கைக்குக் கிடைத்த வெற்றியைத் தொடர்ந்தும், அடுத்தடுத்து வந்த இனக்கலவரங்களின் விளைவாகவும், இன்று வெளிநாடுகளில் அனு

தாபத்தைப் பெற்று 'அரசியல் முதிர்ச்சி' அடைந்துள்ளது. இந்தக் கட்டத்தில் த. வி. கூ. தலைவர்கள் இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதானது, எமது பிரச்சினைக்கு தீர்வு ஏற்படுகிறதோ என்ற மயக்கநிலையை அல்லது போலிநிலையை உருவாக்கி வெளிநாடுகளில் இருக்கும் எமது ஆதரவாளர்கள் மத்தியில் தளர்ச்சியையும் ஏற்படுத்தாதா என்பதை ஒரு வெளிநாட்டவர் என்ற முறையில் விளக்க முடியுமா?

ப: அப்படி இருக்குமென்று நான் நினைக்கவில்லை. ஒரு தலைமை என்பது வெறும்போராட்டத் தலைமை என்று மாத்திரம் இருக்கக் கூடாது. இருக்கமுடியாது. சந்தர்ப்பம், சூழ்நிலை மற்றும் நிலைமைகளுக்குத் தக்கபடி தனது குறிக்கோளை அடைவதற்கு ஏற்ற வழிகளில் செயல்படுவது தான் ஒரு தலைமையின் முதிர்ச்சிக்கும் விவேகத்துக்கும் அறிகுறி ஆகும். இந்திய சுதந்திரப் போராட்டத்தில் காந்தியடிகள் பல்வேறு கட்டங்களிலும் ஆங்கில அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறார். ஆகவே இத்தகைய சந்தேகம் எழுவதற்கு எந்தச் சந்தர்ப்பத்திலும் இடம் அளிக்கக் கூடாது.

## "கோசல்ராமின் குரல் தமிழ் நாட்டின் குரல் அல்ல"

கே: இலங்கைத் தமிழர்கள், இங்கிருக்கும் இந்திய வமசாவளித் தமிழருக்கு இன்னல்கள் வந்த போதிலெல்லாம் அவர்களுக்காக குரல் கொடுத்து வந்திருக்கிறார்கள். உண்மையின்படி, இந்திய வம்சாவழி தமிழரின் குடியுரிமை, வாக்குரிமை பறிக்கப்பட்டபோது அதனை எதிர்த்து தந்தை செல்வாவினால் ஆரம்பிக்கப்பட்ட இயக்கமே தமிழ்மக்களின் பூரண ஆதரவைப் பெற்று, இன்று அவர்களைத் தலைமை தாங்கி வழிநடாத்துகிறது. இந்நிலையில், அண்மையில் திரு. கோசல்ராம் அவர்கள், இந்திய வம்சாவழி தமிழர்களை, இலங்கைத் தமிழர்கள் காட்டிக் கொடுத்தார்கள் என்று சொல்லியிருப்பது முறையானதா?

ப: திரு. கோசல்ராமின் வார்த்தைக்கு அவ்வளவு முக்கியத்துவம் கொடுக்க வேண்டியதில்லை. அவரின் குரல் தமிழ்நாட்டின் குரல் அல்ல. அவருக்கு இந்தப் பிரச்சினைகள் பற்றித் தெரியாது. நான் நேரில் பார்த்தபோது மலைநாட்டுத் தமிழர்களுடன் தமிழ் ஈழத் தமிழர்கள் எந்தளவுக்கு இணைந்திருக்கிறார்கள் என அறிய முடிந்தது. அண்மைக் காலங்களிலெல்லாம், இத்தகைய கொடுமைகளால் மலையகத் தமிழர்கள் பாதிக்கப்பட்டபோது, அரசின் உதவியோ அல்லது வேறெந்த உதவியோ அவர்களுக்குக் கிடைக்காத நிலையில், அவர்களைக் கொண்டுபோய் வவுனியா, கிளிநொச்சி, மன்னார், திருகோணமலை போன்ற இடங்களில் குடியேற்றங்களை ஏற்படுத்தி அவர்கட்குப் புனர்வாழ்வு அளித்தவர்கள், தமிழ் ஈழத் தமிழர்களே. தமிழ் ஈழத் தமிழர்களே அவர்களைத் கவனித்துக்கொள்கிறார்கள். இதை நான் நேரில் பார்த்திருக்கிறேன். இதை அறியாமல் திரு. கோசல்ராம் தமிழ் நாட்டில் இருந்துகொண்டு இதைக் கூறியிருக்கிறார். அவர் நேரில் வந்து பார்த்திருந்தால் அதைச் சொல்லியிருக்கமாட்டார் என நான் நினைக்கிறேன்.

## மதுரை மாநாட்டில் எம். ஜி. ஆரின் கண்டனக் கணை

கே: உலகத்தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் எமது தலைவர்கள் ஈழப் பிரச்சினையை தொட்டுப் பேச முயன்றபோது தமிழக முதல்வர் **எம். ஜி. ஆர்.** கண்டனம் தெரிவித்ததானது, அரபு தேசியவாதிகளுக்கு இடையில் இருக்கும் பரஸ்பர அனுதாப உணர்வுகூட தமிழ் தேசியவாதிகளுக்கு இடையில் இல்லையோ என்று எண்ணத் தோன்றுகிறது. நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

ப: இருக்கலாம், புரிந்துணர்வு இல்லையே என கவலைப்படுவதை விட, நாம் தான் அதை ஏற்படுத்த வேண்டும். தமிழ் நாட்டில் உள்ளவர்கட்கு இதை முழுக்க விளக்கவேண்டிய பொறுப்பு இங்குள்ள தலைவர்கட்கு இருக்கிறது.

கே: அரசியலைவிட்டு சிறிது பொதுப் பிரச்சினைகள் பற்றி கேட்கலாமா? (திரு. நெடுமாறன் முறுவலிக்கிறார்.) தமிழ் நாட்டு சஞ்சிகைகளில் ஆங்கில ஆதிக்கம் நிறைய இருக்கிறது. இதை ஒரு நாகரீகமாக அந்தச் சஞ்சிகைகள் கருதுகின்றனவா? பாரதி கூறியதுபோல் 'மெல்லத்' தமிழினிச் சாகும்' என்பது நிறைவேறிவிடுமோ என அஞ்சுகிறோம். நீங்கள் இதைப்பற்றி என்ன கூறுகிறீர்கள்?

ப: தமிழ்நாடு பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் ஆங்கிலமே பாடமொழியாக இருக்கிறது. ஈழ்நாட்டில் இருப்பதுபோல் முழுத் தமிழ் பாவிப்பு அங்கு வரவில்லை. ஆகவே, கல்வியில் ஆங்கில ஆதிக்கம் இருப்பதால் மொழியிலும் அதன் பிரதிபலிப்பு இருக்கத்தான் செய்யும். இங்கிருப்பதைப் போல் அங்கும் ஆரம்பக் கல்வி தொடக்கம் கல்லூரி வரை தமிழ் மொழி மூலம் கல்வி கற்பதை இயலச் செய்ய வேண்டும் என்று நாங்கள் கருதுகிறோம்.

## தமிழ் நாட்டு சஞ்சிகைகளில் ஆங்கில ஆதிக்கம்

கே: ஆங்கிலப் பதப் பிரயோகத்தை ஒரு 'பார்ஷனக' சஞ்சிகைகள் கருதுகின்றனவோ என்று தான் நாங்கள் நினைத்தோம்.

ப: இல்லை, அங்கு, சரித்திரம், விஞ்ஞானம், பூகோளம் ஆகிய எல்லாமே ஆங்கிலத்தில் தான் படிக்கிறோம். அதனால் தான் அந்த மாதிரி என நினைக்கிறேன்.

கே: தமிழ்நாட்டின் எழுத்துச் சீர்திருத்தம் 'சுடரு'க்கு இணக்கமற்றது; கலை, இலக்கிய, மொழி விடயங்களில் இத்தகைய விபரீத முயற்சிகள் தமிழ் பாரம்பரியத்தின் அடித்தளத்தையே பெயர்த்துவிடுமென அஞ்சுகிறோம்; நீங்கள் என்ன கருதுகிறீர்கள்?

ப: எழுத்துச் சீர்திருத்தம் என்பது அவசரப்பட்டுச்செய்யக் கூடிய ஒன்றல்ல. தமிழ் நாட்டில் மட்டும் எழுத்துச் சீர்திருத்தம் என்பது தவறு. தமிழ் கூறும் நல்லுலகம் முழுவதும் அதில் ஈடுபட வேண்டும். எல்லாப் பகுதிகளிலும் வாழும் அறிஞர்களும், தமிழ் மக்களும், சேர்ந்து தான் அதில் ஈடுபடவேண்டும். தமிழ்நாட்டில் மட்டும் அல்ல, இதைத் தன்னிச்சையாக செய்வதை விடுத்து ஒரு "Scientific approach" இல் செய்ய வேண்டும். இல்லாவிட்டால் குழப்பம் ஏற்படும். குழப்பத்துக்கு இடம் இல்லாமல் தமிழ் பேசும் நாடுகள் எல்லாவற்றிலும் அறிஞர்கள் சேர்ந்து எழுத்துச் சீர்திருத்தத்தை மேற்கொள்வது நன்மை பயக்கும்.

**எழுத்துச் சீர்த்திருத்தம் எவ்வளவுக்கு ஏற்புடையது?**

கே: எங்களைப் பொறுத்தவரையில் இலக்கியம், கலை, மொழி ஆகியவற்றில் அடித்தளங்களைப் பெயர்க்கும்படியான மாற்றங்களை நாம் அனுமதிக்கமாட்டோம். பெரியார் பின்பற்றிய எழுத்துச் சீர்திருத்தம் கூட எங்களுக்கு உடன்பாடானதல்ல.

ப: உங்களின் அடிப்படை நோக்கத்தை நான் பாராட்டுகிறேன். பழமையும் இருக்க வேண்டும். புதுமையும் காணவேண்டும். அதை நானும் வரவேற்கிறேன். ஆனால் வளர்ந்து வருகிற விஞ்ஞானயுகத்தில் நமது மொழி இருக்கும் நிலையையிட்டு பெருமைகொள்ள முடியாது. வளர்ந்துவரும் யுகத்தின் தேவைக்கேற்ப மொழித்தன்மையை மாற்றிக் கொள்ள வேண்டும். வீரமாமுனிவர் இத்தாலியில் இருந்து வந்த கிறிஸ்தவ பாதிரியார். தமிழ் எழுத்தில் சீர்திருத்தங்களை அவர் செய்த போது அது சரியாக இருக்கிறதென்ற உணர்வு தமிழ் அறிஞர்களுக்கு அந்தக் காலத்தில் ஏற்பட்டு அதை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். அதைப்போல் இப்பொழுதும் ஏற்கத் தக்க விதத்தில் எழுத்துச் சீர்திருத்தம் செய்ய முடியாதென்று நான் கருதவில்லை. மொழி மனிதனுக்குக் குதிரையைப் போன்றது. மனிதன் மொழிக்குக் குதிரையாக இருக்க முடியாது. ஆகவே எமது வசதிக்கேற்ப மொழியமைப்பை மாற்றுவது தவறல்ல.

**குமரி ஆனந்தனுடன் ஒன்று சேரலாம்**

கே: திரு. குமரி அனந்தனுக்கும் உங்களுக்கும் இடையில் எந்தளவு கருத்து வேறுபாடு இருக்கிறது? அடிப்படை வேறுபாடு இருப்பதாக எமக்குத் தெரியவில்லையே?

ப: வேறுபாடு இல்லை. தமிழகத்தில் உள்ள தேசிய சிந்தனைகள் படைத்த எல்லோரையும் ஒன்று சேர்க்கவேண்டும் என்றுதான் நாங்கள் ஈடுபட்டு இருக்கிறோம். அந்த நிலைமை சீக்கிரத்தில் வரவேண்டும் என்றுதான் நாங்கள் விரும்புகிறோம்.

கே: 'சுடர்' வாசகர்கட்கு என்ன கூற விரும்புகிறீர்கள்?

ப: ஈழத் தமிழர் பிரச்சினையில் தமிழகத்தின் எந்த அரசியல் கட்சியாக இருந்தாலும் ஒன்றுபட்டு, ஒரே மனதாக இருக்கவேண்டும் என்று நான் விரும்புகிறேன். தமிழகத்தில் அதற்கான முயற்சியில் நான் ஈடுபடவிருக்கிறேன். என்னும் செய்தியை அவர்கட்கு விட்டுச் செல்கிறேன்.

## பறவைகள் பல விதம்

ஆபிரிக்க நெருப்புக்கோழி (African ostrich) என்ற பறவைதான் உலகிலேயே மிகப்பெரிய பறவையாகும். இது ஏறத்தாழ 300 இருத்தல் எடையும் 8 அடி உயரமுமுள்ளது. இப்பறவை இடும் முட்டையும் மிகப்பெரியது. ஓடு நீங்கியமுட்டையின் சுற்றளவு 75 செ.மீ, எடை 3 இருத்தல். மணிக்கு 40 மைல் வேகத்தில் ஓடக்கூடிய இப்பறவையால் பறக்கமுடியாது. ஏனைய பறவைகளுக்கு 4 விரல்கள் இருக்க இப்பறவைக்கு கால்களில் 2விரல்கள் மட்டுமே இருக்கின்றன.

"ஆர்டிக்டெர்ன்" (Arictern) என்ற பறவைதான் உலகிலேயே அதிகதூரம் வலசை (migration) செல்கின்றது. வருடத்தில் இப்பறவை 20,000 இத்திலிருந்து 22,000 மைல் வரை செல்கின்றன.

நியுசிலாந்து நாட்டின் "கியாக்கிளிகள்" (Kea Parrots) ஆடுகளை அடித்துக் கொன்றுவிடும். தங்களுடைய வலிமை மிக்க அலகால் இவை ஆட்டைக் குத்திக் கடித்து, சிறுநீரகத்தைச் சுற்றியுள்ள கொழுப்புப் பொருளை விரும்பிச் சாப்பிடுகின்றன.

செல்வி K. தேன்மொழி. அரனயக்க

# தீபாவளி தேம்பாக்கள்

நரகா சுரனெனும்
நாச காலன்
அவன்'ஒரு' அரக்கன்
அழிந்து பட்டனன்

அந்தநன் நாளினை
அற்புதம் எனவே
முன்னவர் திருநாள்
முறைவகுத்தார்கள்

அன்றைய பாரதம்
அன்றுடன் போனது
பூத்தது இன்று
புதியபா ரதக்கதை

புதிய பாரதத்தில்
கௌரவர் நல்லவர்
ஒடுக்கப் பட்டவர்
ஓய்விலா துழைப்பவர்

ஆளும் அரக்கரால்
அவதிப் படுபவர்
சொத்துடை யோரால்
சுரண்டப் படுபவர்

உத்தமர் வேடத்தில்
ஊரனை ஏய்ப்பவர்
சுரண்டுவ தேகலை
சூதென வாழ்பவர்

யுத்த மொழிந்தது
யுகமது மலர்ந்தது
மண்ணி லேபெரும்
மானுடம் வென்றது

இந்தநல் நாளினை
இனிவரும் காலம்
இனியதீ பாவளி
எனக்களித் திடுவோம்

—காவலூர் எஸ். ஜெகநாதன்

'பசியுள்ள மாந்தரின் படுதுயரம் பொறுக்குமோ?
கசிவுள்ளம் கொண்டவரார்? — காசினியில் — அசுரன்
தனைக்கொன்ற நாளே! தமிழர் திருநாளே,
உனையே வாழ்த்தும் உலகு!'

—ஆலையூர்த்தாசன்

*        *        *        *        *        *        *        *

பஞ்சங்கள் தொலைப்பதென! பசிப்பிணிகள் கலைப்ப
தென
வஞ்சமனப் புலையர்தமை! வாட்டி நிதம் வதைப்ப
தென!
தீபத்திருநாளே! தீர்க்கமுடன் நீ வருவாய்!
தீயகொடுமையெலாம்! தீய்த்தே நீ ஒளிதருவாய்!

வாய்மை மறந்தோரை! வையத்திற் கலைப்பதென!
தூய்மை துறந்தோரைத் தூரத்தே! தொலைப்பதென!
தீபத்திருநாளே! தீர்க்கமுடன் நீ வருவாய்!
தீய கொடுமையெலாம்! தீய்த்தே! நீ ஒளி தருவாய்!

—நிலவூர் மஞ்சுதாசன்

## ஜோஸியத்திற்கு தடை

ஜோஸியம் சொல்வது சிங்கப்பூரில் தடை செய்யப்பட்டுள்ளது. நடந்தவை, நடக்க இருப்பவை, கல்யாணம், உத்தியோகம், குருட்டு அதிர்ஷ்டம் இப்படிப் பல வகையான ஜோஸியங்களைக் கூறி மக்களை ஏமாற்றி பணம் பறிக்கும் ஜோஸியக்காரர்களுக்கு 3 மாதச் சிறை அல்லது 2250 ரூபாய் (500 சிங்கப்பூர் டாலர்) அபராதம் விதிக்க சிங்கப்பூர் அரசு உத்தரவிட்டிருக்கிறது.

இதனால் ஏராளமான ஜோஸியர்கள் வேட்டையாடப்பட்டு, கோட்டில் அபராதம் விதிக்கப்பட்டுள்ளனர். ஆனால் இதுவரை யாருக்கும் சிறைத்தண்டனை அளிக்கப்படவில்லையாம்!

ஆசிய நாடுகளிலேயே கம்யூனிஸ்ட் அல்லத நாடு ஒன்றில் ஜோஸியம் சொல்வதற்கு தடை விதித்திருப்பது சிங்கப்பூர் ஒன்று தான் என்பது குறிப்பிடத்தக்கது.

தகவல்: கதிர்மாணிக்கம்

# பதில்கள்

**இ. இரத்தினகுமார்,**
வட்டுக்கோட்டை.

**கே:** இங்கே விடுதலைக்காக ஓரினம் போராடுகின்ற போது பலஸ்தீன விடுதலை இயக்கத்திற்கு சிறீலங்கா அரசு ஆதரவளிப்பதுபற்றி தங்கள் கருத்து என்ன?

**ப:** ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன்பிள்ளை தானே வளரும் என்ற மனப் பக்குவமாக இருக்கலாம்.

**கே:** சுடர் வாசகர்கள் பலர் விரும்புகிறார்கள்—சுடர் மாதமிருமுறை வெளிவர வேண்டும் என்று. விருப்பம் நிறைவேறுமா?

**ப:** செய்யலாம். இன்று எமக்கிருக்கும் வசதிகளைக் கொண்டு இதனைச் சாதிப்பதற்கு ஒரு சிறிய 'அட்யஸ்ற்மன்ட்' செய்ய வேண்டுமே. ஒரு மாதத்தில் முப்பது நாட்கள் என்பதை மாற்றி அறுபது நாட்கள் என்று ஆக்கினால் செய்யலாம். காலண்டர் கணிப்பவர்கள் கவனிப்பார்களா?

**கே:** மல்லிகை ஆசிரியரின் தாய்மொழி எது?

**ப:** ஏன் இந்த வீண் சந்தேகம்? மகனின் மொழிதான் அவர் தாய்மொழியும். பாட்டி மொழி எதுவென்று கேட்டு எழுதுவேன்.

**ச. திருநாவுக்கரசு**
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

**கே:** சிங்கள அரசுடன் ஒத்துழைக்கும் தமிழர்களும் எம் உடன்பிறப்புக்கள்தானே?

**ப:** கடன்பிறப்புக்கள்!

## கரிகாலன்...

**சி. கருணாகரன்,**
சுதுமலை, மானிப்பாய்.

**கே:** தங்களுக்குப் பிடித்த பேச்சாளர் யார்?

**ப:** ஏசுநாதர் — ஆயிரம் சொற்பொழிவுகளைக் கேட்டாலும் பெருமானின் மலைப்பிரசங்கத்துக்கு ஈடாமோ?

**கே:** தங்களுக்குப் பிடித்த எழுத்தாளர் யார்?

**ப:** என் வயோதிபத் தாயார். கொட்டை எழுத்துக்களில் என்னைக் கோபித்து, ஏசிப்பேசி எழுதும் கடிதங்களைப் படித்தபின் கிழிக்க மனம் வருவதில்லை. அந்த எழுத்துக்களைப் பக்குவமாகப் பாதுகாக்கிறேன்.

**கே:** இந்நாள் இந்தியப் பிரதமர் மகன் ரஜீவ் காந்திக்கும் முன்னாள் இலங்கைப் பிரதமர் மகன் அநுரா பண்டாரநாயக்காவுக்கும் வித்தியாசம் என்ன?

**ப:** ஒரேயொரு வித்தியாசம். ஒன்று அறுகரிசி—மற்றது வாய்க்கரிசி! (அன்னைமார் சம்பந்தப்பட்டவரை)

**இ. ராஜன்** 'ராஜபவனம்'
சங்கானை

**கே:** கரிகாலன் அண்ணா, சிறில் மத்தியூவுக்கு தமிழர்களை நசுக்கும் எண்ணத்தைத் தவிர வேறு எண்ணம் வராதா?

**ப:** "வருந்தியழைத்தாலும் வராதவரார"

**கே:** எங்கே பல நாட்களாக இராசதுரையின் கதையே இல்லை. இவ்விடம் இருக்கிறாரா அல்லது வெளிநாட்டுக்கு ஓடி விட்டாரா?

**ப:** இராசதுரையின் கதை ஒரு லௌகீகக் கதையோ ரௌடீகக் கதையோ அல்ல. அது ஒரு தெய்வீகக் கதை. இந்து சமய ஈடேற்றத்திற்காக அமைச்சர் ஆற்றும் திருப்பணியை நோக்கும்போது, நாயன்மார் பட்டியல் அறுபத்து மூன்றுடன் முடியாது போலிருக்கிறது. அதுவே அடியேனின் அச்சம்.

'பாலமேனு' மண்டைதீவு-1

**கே:** பெருந்தொகையான அரிஜன மக்கள் இந்தியாவிலும் இலங்கையில் சில இடங்களிலும் மதம் மாறிக்கொண்டும் - மாற முயன்றுகொண்டும் இருக்கின்றனர். இதன் மூலம் எதிர்பார்க்கும் தேவைகளையும் உரிமைகளையும் பெற்றுவிட முடியுமா?

**ப:** தேவைகள் வேறு— உரிமைகள் என்பது வேறு. தேவைகள் தற்காலிகமானவை. உரிமைகள் நிரந்தரமானவை. மதமாற்றத்தின் மூலம் சில வேளைகளில் தனிப்பட்டவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யலாம்; ஒரு சமுதாயத்தின் உரிமைகளைப் பெற்றுவிட முடியாது, சமூக அநீதிகளைப் போராட்டத்தின் மூலமே சந்திக்க முடியுமா. மதமாற்றம் போராட்டமல்ல-சரணாகதி.

**கே:** பாரத விடுதலைக்கவி பாரதி போல ஈழவிடுதலைக்கு காசி ஆனந்தன் என்றல்லவோ நினைத்திருந்தோம், அவர் எங்கேதான் போய் விட்டார்?

**ப:** தமக்கிருந்த அரசியல் பணிக்கான வாய்ப்புக்களையும் பாரிய செல்வாக்கையும் பிரமைப் பாறையிலே "சிதறு

தேங்காயாக" அடித்து நொறுக்கிய அதிபுத்திசாலிக்குப் பெயர் காசி ஆனந்தன். அரசியல்வாதி காசி ஆனந்தன் ஆமையாகிவிட்டாரே என்று யாரும் அழவேண்டியதில்லை. அது அவருக்கும் நல்லது, அரசியலுக்கும் நல்லது. கவிக்குயில் காசி ஆனந்தன் ஊமையாகிவிட்டானே என்று அழுங்கள். கவிஞன் தூங்கியதால் இனத்துக்கு இழப்பு. தமிழ் இலக்கியத்துக்கு இழப்பு. தமிழ் உணர்ச்சிக்கு பெரும் தளர்ச்சி!

**கே:** 1982ம் ஆண்டு தைப் பொங்கல் அன்று தமிழ் ஈழம் பிரகடனப்படுத்தப்படும் என்று கூறியுள்ளார்கள். இது சாத்தியமா?

ப: இந்நாட்டிலா - வெளிநாட்டிலா? வெளியிலென்றால் 1982வரை காத்திருக்க வேண்டியதில்லையே. பிரித்தானியா, அமெரிக்கா, நியூசிலாந்து, கனடா, அவுஸ்திரேலியா, பிரான்சு, ஜெர்மனி இன்னோரன்ன நாடுகளில் எது வித எதிர்ப்பும் இன்றி தாராளமாகச் செய்யக்கூடிய ஒரு விடயம்.

**கே. காளிமுத்து**
கோவுஸ்ஸ டிவிஷன், எல்ல.

**கே:** மலையகத் தொழிலாளர்களின் தலைவராக இருப்பதற்கு தொண்டமானுக்குத் தகுதி இல்லை என்கிறேன்?

ப: தோட்ட முதலாளிமார் சம்மேளனத்திலும் அவர் அங்கம் வகித்ததால் அத்தகுதி உண்டு என்கிறேன். தொழிலாளர் நலனில் ஒரு முதலாளிக்கு இல்லாத அக்கறையா?

**கே:** தொண்டமான் தற்போது எங்கு இருக்கிறார்?

ப: திரிசங்கு சொர்க்கத்தில்.

**கே:** தோட்டப்பாட்டாளி மக்கள் வன்செயலால் பாதிப்புற்று அழும்போதுகூட தொண்டமான் பேசாமல் இருக்கிறாரே. எனக்கு ஒரு சந்தேகம்—தொண்டமான் ஒரு தமிழரா?

ப: தமிழர்தான். சந்தேகம் வேண்டாம். தொண்டமானுக்கு இரட்டை உருவம். ஒன்று தமிழனுக்காகத் துடிக்கிறது. மற்றது தனக்காகத் துடிக்கிறது. தனக்கு பிறகு தானே தானமும் தர்மமும்.

**வி. பரராசசேகரம்,**
கண்ணகிபுரம், வாழைச்சேனை.

கே. உள்நாட்டு அமைச்சர் தேவநாயகம் அவர்களை கல்நாட்டு அமைச்சர் என்றால் எப்படியிருக்கும்?

ப: அத்துடன், மாட்டுப் பண்ணை வளர்க்கும் தொண்டமானை புல் நாட்டு அமைச்சர் என்றும், வெறும் பேச்சிலேயே நிர்வாகம் நடத்தும் இராசதுரையை சொல்நாட்டு அமைச்சர் என்றும் அழைக்கலாமே.

**எம். ராஜா ரமேஷ்,**
கோவுஸ்ஸ எஸ்டேட், எல்ல.

**கே:** திரு. தொண்டமான் இந்தியா சென்று இங்கு அகதிகளுக்கு உதவுமுகமாக தலைக்கு 25 சதம் கேட்டாராம். அதே வேளை 82-ம் ஆண்டு மாநாடும் நடாத்தப் போகிறாராம். இந்த ஆடம்பரச் செலவு செய்யும் பணத்தை அந்த அகதிகளுக்கு கொடுத்து உதவலாமே?

ப: இந்தியா திரும்பும் அகதிகளுக்கு இலங்கை அரசு கொடுத்தனுப்பும் 300 ரூபா 'சீர்வரிசையை' மறைமுகமாக இந்தியாவிடமிருந்து அறவிடுவதற்கு இலங்கை அமைச்சர் என்ற முறையில் தொண்டமான் முயன்றாரோ என்னவோ!

**கே:** நமது அரசாங்கம் மக்களுக்கு இனிப்பான செய்தியையும் கசப்பான செய்தியையும் தரவல்லது என்கிறேன். உதாரணம்: சீனிக்கு விலை குறைப்பு-மாவுக்கு விலையேற்றம். ஏழைகள் வயிற்றில் அல்லவா அடிக்கிறது?

ப: சாண் ஏற முழம் சறுக்குவது பற்றி கேள்விப்பட்டிருக்கிறோம். இது சாண் இறங்க முழம் ஏறுவது.

**கனக. பிரதீபன்,**
கேணியடி, கொக்குவில் மேற்கு

**கே:** மகாராணியாரின் வருகையால் தமிழ் மக்களுக்கு ஏற்படப்போகும் நன்மை என்ன?

ப: ஐரிஷ் பிரச்சினையின் மீது திரையிட்டுவிட்டுப் பார்த்தால், பிரித்தானிய அரசியல் பாரம்பரியமும் அரசயந்திர அமைப்புகளும் மனித சுதந்திர உணர்வுகளின் சுமைதாங்கிகள். ஒடுக்கப்பட்ட இனங்களின் பிரதிநிதிகள் உலகநாடுகளிடம் முறையிட ஓடோடி வருவது இலண்டனுக்குத்தான். அவலமுற்ற நெஞ்சங்களுக்கெல்லாம் பிரித்தானிய சட்டமும் சம்பிரதாயங்களும் இந்த ஆறுதலைத் தருகின்றன. மகாராணியார் இந்தப் பாரம்பரிய அமைப்பின் ஆணிவேர்-முனைக்கல். அவரை வாழ்த்துவோம். எனினும், தமிழர் பிரச்சினை இங்கு தீர்ந்துவிட்டது என்ற மயக்கத்துடன் மகாராணியார் வந்து திரும்புகிறாரே என்பதே எமது வருத்தம். இந்த மயக்கத்தை ஏற்படுத்த நம்மவர்களான கலாநிதிகள் வில்சனும் நீலன் திருச்செல்வமும் ஜே. ஆருக்கு ஒத்தாசையாக என்ன உழைப்பு உழைத்தார்கள்! அது சரி, ஐரிஷ் பிரச்சினைமீது என்ன திரை வேண்டிக் கிடக்கிறது?

கே: சமூகத்திற்காக சேவை செய்பவர்கள் பல கஷ்டங்களுக்கு உள்ளாகின்றனரே. காரணம் என்ன?

ப: சேவையில் சிரமம் இருப்பதால்தான் சமூகசேவகி திரேசா அன்னையாருக்கு நோபல் பரிசு கிடைத்தது. சேவை செய்வதில் சிரமம் இல்லாவிட்டால் சமூக சேவகிகள் பெருகி, அவர்கள் தொல்லையிலிருந்து சமூகத்தைக் காப்பாற்ற வேண்டிய நிலை ஏற்படும். நோபல் பரிசு கொடுப்பதும் கட்டுப்படியாகாது.

கே: தமிழர் பிரச்சினை கிணற்றுள் போட்ட கல் போல் இருக்கிறதே. ஏன்?

ப: ஆற்றில் கரைத்த புளி போல இல்லையே. அதுவரை திருப்திப்படுங்கள்.

தமிழ்த் தேனி, சுழிபுரம்.

கே: ஒவ்வொரு மதத்து மக்களும் தங்கள் மத குருமாரை மரியாதையுடன் நடத்துகிறார்கள். ஆனால், இந்து மத குருமாரை இந்துக்கள் அங்ஙனம் மரியாதை செய்வதில்லையே. (உதாரணமாக, பஸ் பிரயாணத்தில் கவனிக்கலாம்) இது ஏன்?

ப: இந்துக்கள் தமது மத குருமாருக்கு உரிய மரியாதை கொடுக்க மறுப்பதாகத் தெரியவில்லை. பஸ் பயணம் வேறு அடிப்படையில். ஒரு நிகழ்ச்சி கூறுகிறேன். கொழும்பில் பஸ் வண்டியில் குருமாரின் ஆசனத்தில் ஒரு குடு குடு கிழவி. நின்று பயணம் செய்ய சக்தியற்றவள். இடையில் திடமான உடற் கட்டுடன் ஒரு புத்தபிக்கு ஏறுகிறார், தமது ஆசனத்தைக் கோரும் தோரணையில் கிழவியை பார்க்கிறார். கிழவியின் முகத்தில் கெஞ்சும் பாவனை. கூடியிருந்த குருட்டுச் சமூகம் கிழவியை நிர்ப்பந்தித்து எழுப்பிவிட, புத்தகுரு அமர்கிறார். கிழவி தளர்ந்து தடுமாறிச் சாய்கிறாள். மனிதாபிமானத்தை நிராகரிக்கும் இந்த மரியாதை எமது குருமாருக்கு வேண்டவே வேண்டாம். தளர்ந்தவர் எவராயினும் அவருக்கு ஆசனம் தருவதுதான் பண்பு.

கே: இராவணன் சைவன் என அறிவோம். ஆனால், அவனது தாய்மொழி என்ன?

ப: "அன்றந்த இலங்கையினை ஆண்ட மறத்தமிழன்— ஐயிரண்டு திசைமுகத்தும் தன் புகழை வைத்தோன்" என்று புரட்சிக்கவி புகன்றதை அறியீரோ? சைவன் வேறு இனத்தவனாக இருக்க முடியாதே. "தென்னாடுடைய சிவனே போற்றி" என அறியீரோ?

கே: தமிழ் மக்கள் மீது அடிக்கடி நிகழும் தாக்குதல்களைச் சமாளிக்கத் துடிக்கும் தமிழ் இளைஞர்களுக்கும் யுவதிகளுக்கும் பயிற்சி அளித்தால் என்ன? இதற்கு த. வி. கூ. அல்லது இளைஞர் பேரவை நடவடிக்கை எடுக்கக்கூடாதா?

ப: எதைச் சொல்கிறீர்கள்? தாக்குதலின் பின் அளிக்க வேண்டிய முதலுதவிச் சிகிச்சை முறைப் பயிற்சி தானே? உரியவர்களிடம் சொல்கிறேன்.

மி. அருள்மொழிராஜா
நிலாவெளி - 3

கே: இரத்தம் குடிக்கும் புரியா? இரத்தினபுரியா? தமிழர்களின் இரத்தத்தை குடித்தார்களாமே?

ப: அது—அவர்கள் பெருமைப்படுகிறபடி — சிங்கத்தின் வம்சாவழி ஆயிற்றே. அந்தப் புத்தி போகுமா? நாகரிக உலகு வெட்கித் தலைகுனிகிறது.

கே: கலைஞர் விடுதலைக்காக கனலும் நெருப்பில் குளித்த திராவிடச் செல்வங்கள்பற்றி சில வார்த்தைகள் கூறுங்களேன்?

ப: அன்று இந்தியை எதிர்த்து தீக்குளித்த திரபரம்பரை, இன்று சிங்களச் செந்தீயிலே வேகின்ற ஈழத்தமிழனுக்காகச் சிறையுண்டான் தம் தலைவன் என்ற சேதி கேட்டு வேதனையால் நொந்து, வெந்தீயிலே குளித்து வீரசுவர்க்கம் எய்தியது.

கே: இன்றைய ஈழத்தில் பாரதி இருந்தால் எப்படிப் பாடுவான்?

ப: 'சிங்களத் தீவினிலோர் களம் அமைப்போம்' என்று.

தமிழ்ப்பித்தன்.
கோவுஸ்ஸ டிவிஷன், எல்ல.

கே: தோட்டத்தொழிலாளரின் பல பிரச்சினைகளை முன்வைத்து பல தொழிற்சங்கங்கள் போராடும்போது தொண்டமான் தலைமையிலான தொழிற்சங்கம் மட்டும் பேசாமல் இருப்பது ஏன்?

ப: அதன் தலைவர் தொண்டமான் என்பதால். தொண்டமான் நலனும் தொழிலாளர் நலனும் என்றும் ஒன்றுக்கொன்று முரண்பட்டனவாயிற்றே. தர்க்கரீதியாக இணைய முடியாதே.

கே: தமிழர் பிரச்சினைகள் எழும்போதெல்லாம் தொண்டமான் மட்டும் தர்மிஷ்டருக்கே காக்காய் பிடிப்பது ஏன்?

ப: காக்காய்பிடிப்பது என்பது காரியமாவதற்கு. பிடிப்பது என்று தீர்மானித்த பின் யாருக்குப் பிடித்து வாழ்ந்தால் என்ன?

கே: தோட்டத் தொழிலாளரை அடித்து நொருக்கி அகதிகளாக்கி விட்டிருக்கும் இவ்வேளையிலும் அவர்களுக்கு சுபீட்சமான வாழ்வு எனத் தமது சார்புப் பத்திரிகைகளில் விளம்பரப்படுத்தியுள்ளாரே தொண்டமான்?

ப: சிலர் காப்பிக்கடைகளில் காப்பி குடிக்க வரும்போது பார்த்திருக்கிறீர்களா? ''சீனிக்கோப்பி'' என்று கேட்பார்கள். அதன் பொருள் ,,பால் போடாத காப்பி''. சர்வரும் பொருளுணர்ந்து காப்பி கொண்டுவருவார். தொண்டமான் 'சுபீட்சமான வாழ்வு' என்னும்போது காப்பிக்கடை மொழியில் பேசுகிறார்.

**அ. தயாபரி,**
கொக்குவில் மேற்கு.

கே: காசி அண்ணாவையும் வண்ணை அண்ணாவையும் எங்கே திருமணத்தின் பின் காணோம்? கட்சியிலிருந்து விலகிவிட்டார்களா?

ப: விலக மாட்டார்கள். பாவம், வண்ணைக்காவது தேன் நிலவுக்காலம். காசிக்கு என்றோ பொழுது புலர்ந்திருக்க வேண்டுமே?

கே: நெவில் பெர்ணாண்டோவை கட்சியிலிருந்தும் எம். பி. பதவியிலிருந்தும் நீக்கி விட்டார் போலிருந்தது. பின்பும் பாராளுமன்றத்திலிருந்து இன வாதத்தை கக்குகின்றாரே?

ப: எம். பி. பதவியிலிருந்து இன்னும் நீக்கவில்லை. ஜே. ஆரின் சத்திய வேட்கை நாடகத்தின் ஒத்திகை மட்டுமே முடிந்திருக்கிறது.

கே: தார்மீக அரசியல் வாதிகள் வாயில் வந்ததெல்லாம் பேசலாமா?

ப: வராததையும் பேசலாம்!

**ச. நித்தியானந்தம்,**
கனகராயன்குளம், மாங்குளம்.

கே: மல்லிகை மலரைப் போல ஒவ்வொரு ஆண்டும் ஒரு 'சுடர்' இதழை ஆண்டு மலராக வாசகர் கையில் தவழ விட்டால் என்ன?

ப: யோசிப்போம். ஆமாம், ஒவ்வோர் ஆண்டும் 'தவழ்ந்து' கொண்டிருப்பது வளர்ச்சிக்கு நல்லதல்லவே.

கே: நவம்பர் மாதம் 4ம் திகதிக்குப்பின் கூட்டணியின் போக்கில் ஒரு திருப்புமுனை ஏற்படுமா?

ப: போக்கில் ஏற்பட்டால் வரத்திலும் ஏற்படும்.

கே: இறுதியாக ஒரு கேள்வி. உங்கள் திருமணம் காதல் திருமணமா!

ப: கானல் திருமணம்!

**வி. ஆர். தங்கவேல்,**
(அச்சுவேலி வடக்கு)
அச்சுவேலி.

கே: இன்றைய பொருளாதார நெருக்கடியில் அச்சிடும் செலவுகள் அதிகம் என்று எமக்குத் தெரியும். எனினும் தமிழ் உணர்ச்சியையும் இலக்கியதாகத்தையும் தூண்டிவிடும் எம் இதயச்சுடர் தாமதித்துவிட்டால் ஏதோ ஒன்றை இழந்துவிட்ட உணர்வு எமக்கு ஏற்படுகின்றதே?

ப: தங்கள் கடந்தகால இழப்புக்களை ஈடுசெய்வோம். எதிர்கால இழப்புகளைத் தவிர்ப்போம். திருப்திதானே?

கே: ஓர் எழுத்தாளன் இன்னோர் எழுத்தாளனின் படைப்புகளைப் பாராட்டி விமர்சனம் எழுதக்கூடாதா?

ப: எழுதலாமே. ஆனால், பாராட்டுவது என்பது ஒன்று விமர்சிப்பது என்பது இன்னொன்று. பார்த்துச் செய்யுங்கள்.

## விண்ணிலே கண்ணதாசன்!

**— கனக. மனோகரன் —**

1. கோல மயில்கள் துணையென் றிருந்தவன்,
கோப்பை மதுவில் குடிகொண் டிருந்தவன்
காலம் பொய்யாத் தத்துவம் அறிந்தவன்.
கற்றவர் மெச்சும் முத்துக்கள் சொரிந்தவன்,
கோல மயிலின் இறகினைப் பார்த்தவன்
கோப்பையில் எழுதும் மையினைச் சேர்த்தவன்
காலம் வெல்லும் கவிதைகள் படைத்தவன்,
காசினியில் பெயர் நிலைபெற முடித்தவன்.

2. முக்காலம் உணர்ந்தவனும் இன்னியவன்
முக்கண்ணன் நெறிகாத்த முன்னையவன்,
சிக்காகோ நகரதையும் நண்ணியவன்,
செகம்இந்து மதமறியப் பண்ணியவன்,
தக்கஅவன் தாள்தொடர்தெம் பின்னையவன்
தமிழர்மத அர்த்தங்களை எண்ணியவன்
சிக்காகோ நகரஎழில் மண்ணிலவன்
சிவன்தாளை நண்ணியதால் விண்ணிலவன்.

# சுமைதாங்கிகள்



வளவன்

என்பது யாருக்குத்தான் தெரியும்? யாரறிவார்.

மரியாயி பழைய அலுமினியப் பானை ஒன்றை அடுப்பிலேற்றித் தீமூட்டுகிருள். குழந்தை குப்பம்மாள் மரியாயியின் முதுகுப்புறச் சேலையைப்பற்றி இழுத்து தனது பசியை நாசூக்காக ஏதோ ஒரு நயனபாசையால் சொல்லிக் கொண்டிருக்கிறது. பறட்டைத்தலையும் அழுக்கடைந்த தலையுமாக இருந்த குப்பம்மாவின் உருவம் உயிரற்ற ஒரு பாவையின் தோற்றத்தை நினைவூட்டிக் கொண்டிருந்தது.

வேலுவும் கண்ணனும் ஐந்து ஆறுவயதுச் சிறுவர்கள். பிறந்த மேனியாக அந்தச் சிறுவர்களிருவரும் முனீஸ்வரன் வீதியால் போகும் மக்களிடம் கைநீட்டி ஐயா.........பசி......... அம்மா.......பசி என்று பிச்சை எடுத்துக்கொண்டிருந்தனர். மழலைமாருத அந்தப் பிஞ்சுக் குழந்தைகள் — உலகின் தாற்பரியத்தை உணர்ந்ததாலோ என்னவோ கைநீட்டிப் பிச்சை எடுத்துக் கொண்டிருந்தனர். அந்தக் கொடிய காட்சியைக் கண்ட இரக்க சிந்தையுள்ள சிலர்ஐந்துசதமோ பத்துச் சதமோ கொடுத்துவிட்டுச் சென்றனர். ' சீ..........போயோ. சும்மா கச்சானுக்கொண்டு சோளகத்துக்கொண்டு பெத்து விட்டிருக்கினம்' என்றும் சில உயர்ந்த மனிதர்கள் தமது திறமையான பதிலையும் சொல்லத் தவறவேயில்லை. பலரது ஏளனத்திற்கு இலக்காகிவிட்ட முனுசாமியின் குடும்பத்தின் அவலங்களை யார்தான் புரிந்து கொண்டனர்.

அகதிகள் என்ற புதிய பெயரைத்தாங்கி வந்தநாள் முதல் இன்றுவரை முனுசாமி தன் மனைவி மக்களோடு அந்த மருத மரத்தின் கீழ்தான் குடி இருந்தான். அவனுக்கு மட்டுமா இக்கதி. அவனைப் போல இன்னும் எத்தனையோ முனுசாமிகளும் மாடாசாமிகளும் இதே நிலைதான். யாழ் முனீஸ்வரன் வீதி பிரதான வீதியை இணைக்கும் சந்தியின் ஓரத்தில் ஓங்கி வளர்ந்திருந்தது அந்த மருதமரம். இரவுவேளைகளில் அந்த மருதமரத்தின் மீது குடிபோகும் பறவைகளின் எச்சங்களையெல்லாம் நிலத்தில் படுத்திருந்து தாங்கும் எச்சந் தாங்கிகளாகத்தான் முனுசாமியின் குடும்பம் பரிதாபத்திற்குரிய ஒரு பிச்சைக்காரக் குடும்பமாகத்தான் தெரிந்தது. ஆனால் இந்த நாட்டின் உழைக்கும் மக்கள் கூட்டத்தின் ஓர் அங்கம்முனுசாமியின் குடும்பம்

''தனியொருவனுக்கு உணவில்லை எனில் ஜெகத்தினை அழித்திடுவோம்'' என்று பாடிய மனிதன் பிறந்த இந்தப் பூமியில் தான் முனுசாமியின் குடும்பமும் — அவர்களை ஏளனம் செய்வோரும் கூடப் பிறந்துள்ளனர் என்பதை எண்ணும் போது..............இந்த உலகை நினைத்து அழவேண்டும் போல இருக்கிறது. மனிதகுலத்தின் இந்தக் கொடுமைகள் எல்லாம் எப்போதான் மறையுமோ? அது யாருக்கு வெளிச்சமோ?

முனீஸ்வரன் வீதிக்குக் கீழ்ப்புறமாக இருந்த அந்தக் குளத்தின் சேறுநிறைந்த கரையோரப் பகுதி யெங்கும் பச்சைப்பசேலென வளர்ந்து செழித்திருந்தது ஒருவகைப் புல். முனுசாமி அந்தக்குளத்திற்குள் இறங்கி புல்லை பிடிபிடியாக அரிந்து கொண்டிருந்தான். முழங்காலிற்கு மேல் இடுப்புவரை கருஞ்சேறு இவன் கால்களைப் பற்றிப் பிடித்திருந்தது. எங்கோ குப்பை மேட்டில் கிடந்து துருப்பிடித்த ஒரு பழைய கத்தி குளக்கட்டில் உரசி உரசித் தீட்டியதால் கூர்ந்து போயிருந்தது. அதன் பளபளப்பு நிறைந்த கூர்மை புல்லின்மீது பட்டு ஸ்சிறிக்...... சிறிக்என்ற ஓசையோடு அரிந்து தள்ளியது.

அதிகாலையில் இருந்து அரியத் தொடங்கியதால் ஏதோ ஒருவாறு சாக்குநிறைய அரிந்துகொண்டான் முனுசாமி சேறும் சகதியும் நிறைந்த சூழல் முனுசாமிக்கு எஸ்டேட்டின் சூழலில் பழகி இருந்ததால் அது ஒன்றும் புதுமையாக இருக்கவில்லை. அரிந்தெடுத்த புல்லை நீர்வடிய வைத்து சாக்கில் அடைத்துக்கொண்டு தலைச் சுமையாகச் சுமந்து கொண்டு சந்தையை நோக்கி நடந்தான்

முனுசாமி. முனுசாமியின் தோற்றமும் ஓட்டிய வயிறும் பார்க்கப் பலருக்குச் சிரிப்புத் தான் வந்தது. சிந்திக்கவேண்டிய மனிதர்கள் சிரித்துக் கொள்வதால்தானே இங்கு சீரற்ற சமூகமாக சமுதாயத்தின் ஒருபகுதி மாறிக் கொண்டிருக்கிறது! இப்படிச் சிரிப்பவர்களைக் காணும் போதுமுனுசாமி தனக்குள் நகைத்துக் கொள்வான். ஏதாழ்ந்த உலகமே ஏழ்மையைப் போக்க இப்படியாவது ஒரு தொழிலைச் செய்தால் அதறகு ஏளனமா? தொழிலை மதிக்காததால் தானே நம்நாடு இப்படிக்கிடக்கிறது. எ,ன்றெல்லாம் முனுசாமி எண்ணி வேதனைப்படுவான். வேதனைதானே ஏழைகளின் தனிச் சொத்து.

சந்தை நிறைய ஆலங்குழைக் கட்டுகளும் புல்லுக் கட்டுகளும் நிறைந்துகிடந்தன. முனுசாமியும் தனது சாக்கை அவிழ்த்து கும்பி கும்பியாக புல்லை எடுத்து வைத்துவிட்டு குந்தியிருந்தான். பொள்ளல் விழுந்த வேண்டியினூடாக பட்டினியால் தொங்கு சதையாகிப்போன இளமையிலேயே முதுமையடைந்த அவனுடலின் சில பாகங்கள் தலை நீட்டிக் கொண்டிருந்தன. சேறும் சகதியும் இன்னுமொரு பக்க வேட்டியை ஆக்கிரமித்துக் கொண்டிருந்தது. இத்தனைக்கும் அவனது கத்தி படாத தடித்த மீசையும் உட்குவிந்த கண்களும் பார்ப்பதற்குப் பைத்தியக்காரனைப் போல் தான் இருந்தது. இல்லாமை ஒரு மனிதனை எதையெதை யெல்லாமோ இழக்கச் செய்து விடுவது ஒன்றும் புதுமையில்லையே.

ஒரு குவியல் ஐம்பது சதம் ............ஐம்பது .. .........என்று கூவிக் கொண்டிருந்தான் முனுசாமி. ஒருசிலர் முனுசாமியிடம் புல்லு வாங்கியபோதும் பலர் நீர்ச்சுனைப் புல் என்று கூறிவிட்டு அப்பால் சென்றுகொண்டனர். ஆலங்குழைக்குத் தான் அதிகம் கிராக்கி இருந்தது. நேரம் உச்சிப் பொழுதைக்கடந்து கொண்டிருந்தது. இன்னும் ஒருரூபாய்க்கு மேல் விற்க முடியவில்லை முனுசாமியால். மாலைப் பொழுதில்தான் யாராவது புல்லுக்கு வருவார்கள் போலும் என்று தனது நொந்து போன மனதிற்குத் தானே சமாதானங் கூறிக் கொண்டிருந்தான் முனுசாமி. அவனிதயத்தில் மரியாயியும் பிள்ளைகளும் பட்டினி கிடக்கப் போகிறார்களே என்ற நிழல் போல் நிரம்பி இருக்கும் நினைவுகள் நிசமாகி விடக்கூடாது என்ற பிரார்த்தனை வேறு.

மரியாயி முதல் நாள் யாரோ ஒருவரின் ஏற்பாட்டில் அன்று மட்டும் அரிசிக் கிட்டங்கில் வேலை செய்து விட்டு வரும் போது அங்கு சிதறிக் கிடந்த அரிசிமணிகளைக் கூட்டி எடுத்து வந்திருந்ததால் அந்த அரிசியை உலையில் போட்டுக் கஞ்சியாக்கிக் கொண்டிருந்தாள். அரிசிமூடைகள் பறிக்கும் போது தெருவோரம் கொட்டிச் சிதறிய அரிசியது. அதை கூட கூட்டி அள்ள அவள் பட்டபாடு. சே ................அந்தக்கிட்ட நிதி முகாமையாளர் கட்டளையிட்டபடி ஏவல்களையெல்லாம் செய்து முடித்து விட்டுத்தான் அவள் அங்கு சிதறிய அரிசியை கூட்டி அள்ளிக் கொண்டாள். பறவைகள் கொத்தித் தின்னுமிந்த சிந்திய அரிசியைக் கூட்டி எடுப்பது கூட மனிதருக்கு ..... ஆகாத செயலாம்... பானையைத் துளாவிக்கொண்டிருந்த மரியாயிக்கு வாழ்க்கையில்வெறுப்புத்தட்டி விட்டதாலோ என்னவோ தனக்குள் சலித்துக் கொண்டாள். அவள் உள்ளத்திலெழுந்த துன்ப உணர்வுகள் விரக்தியாகி எங்கோ எங்கோ இழுத்துச் சென்றன. விழிகளை மூடிக் கொள்கிறாள், கண்ணீரைக்கட்டுப்படுத்தலாமென்று. கண்ணீர் கட்டுக்கடங்காதோடும் ஆற்று வெள்ளம் போல் அணைகடந்து பெருகிக் கொண்டிருந்தது. அந்தக் கண்ணீர்த்துளிகளில் தான் எத்தனை கதைகள் ஆழ்ந்து கிடக்கின்றன.

எட்டியாந்தோட்டைப் பகுதியில் றப்பர் தோட்டலயம் ஒன்றில் குடியிருந்த தொழிலாளர் குடும்பம் அது. ஏதோ வாரா வாரம் கிடைக்கும் கூப்பன் மாவில் ஒரு வேளைச்சாப்பாட்டைச் சரிப்படுத்திக் கொண்டிருந்தனர். அப்போதெல்லாம் கீழ் வான் சிவந்து வரும் போதே எழுந்து ஏதோ குழந்தைகட்கு இரண்டு ரொட்டி பிசைந்து தப்பி வைத்து விட்டு மரியாயி முனுசாமியோடு தோட்டத்திற்குச்

---

## 'தாடி' தந்த லாபம்!

ஷா, தாம் இறக்கும் வரையில் தாடி வைத்திருந்தார். ஒரு நாள் ஒரு நிருபர் ஷாவிடம், எதற்காக தாங்கள் தாடி வைத்திருக்கிறீர்கள்? இதனால் ஏதும் லாபமுண்டா? என வினவினர். அதற்கு ஷா "லாபம் உண்டு" என்றார். 'எப்படி" என்று நிருபர் கேட்டார். அதற்கு ஷா, 'இளைஞரே! நான் சவரம் பண்ணிக் கொள்வதற்காகச் செலவிட்டிருக்க வேண்டிய நேரத்தில் நிச்சயமாக ஒரு நாடகமாவது எழுதியிருப்பேன் இல்லையா" என்றாரே பார்க்கலாம், நிருபரின் முகத்தில் அசடு வழிந்தது!

— என். காந்திமதி, அளவத்துகொட.

## என்பா!

'ஆடும்! இணைவோரை ஆட்டும்! கடைசிவரை
ஓடும்! பலதை உருவாக்கும்!—வேடிக்கை
காட்டும்—மறைவாகும்! கனபாரமாயிருக்கும்!
ஒட்டியே பேணும் உயிர்!'

(ரூபா)

'கோலேந்தி'

சென்று விடுவாள். அன்றாடங் காய்ச்சிகளான பல குடும்பங்கள் இப்படித்தான் வாழ்க்கையை ஓட்டிக் கொண்டிருந்தன. நாலு ஐந்து மணிவரையும் வேலை செய்து கால் சோர உடல் சோர உள்ளச் சலிப்போடு லயத்திற்கு வந்து சேருவர். அப்போதும் அவர்கள் வறுமை என்ற கப்பலில் தான் வாழ்க்கை என்ற கடலை நீந்திக் கொண்டிருந்தனர். இன்றைய நிலையை விட அன்று ஏதோ நேரத்திற்கு ஒருவேளையாவது சாப்பாடு கிடைத்தது. ஆனால் இன்று ...... பூச்சியந்தான்.

தோட்டத்துக் கூலிகள் என்றால்...... அவர்களது துயரங்களை சும்மா சொல்லில் சொல்லி விடமுடியாது. சே... கங்காணிமாரின் அதிகாரங்கள்......... துரைமாரின் அதிகாரக் கெடுபிடிகள் இத்தனைக்கும் மத்தியிலே...... அதுவும் ஒரு நரகலோகமாகத்தான் இருந்தது அவர்களுக்கு. என்ன செய்வது... இல்லார்க்கும் வறியவர்க்கும் தம் இல்லாமையை எண்ணும் போது ஆண்டவனை நொந்து கொள்வதைத் தவிர வேறென்ன செய்யமுடியும். ஆண்டவன் என்னத்தைச் செய்து விடப் போகிறான். வசதிபடைத்தவர்களை விட வசதியற்றவர்களும் இல்லாதாரும் தானே இப்புவியில் அதிகமாக இருக்கின்றனர். இந்த நிலையில் ஆண்டவன் எதைத்தான் சாதித்து விடுவான். இருந்தும் முனுசாமிக்கும் மரியாயிக்கும் ராம ஜெயம் சொல்வதில் ஒரு தனி திருப்தி. அந்த மந்திரத்தை உச்சரிப்பதால் தான் தமது ஏழ்மை நிலைமாறும் என்ற ஒரு அதீத நம்பிக்கை போலும்.

வறுமையின் பேயாட்டத்தோடு வாழ்க்கை ஓடிக் கொண்டிருந்த வேளைதான் அந்தக் கொடுமையும் நடந்து முடிந்தது. இனக்கலவரம் உச்சக்கட்டமாகி நாடுபூராவும் பேயாட்டமும் வெறிக் கூத்துமாக நடந்து கொண்டிருந்தது.

கூட்டங் கூட்டமாக வந்த காடையர் கூட்டம் லயங்களினுள் புகுந்து தொழிலாளரைத் துரத்திஅடித்துத் துன்புறுத்தியது. இளைஞர் முதியோரென்ற பேதமை கூட இடம் பெறாது கோரத்தாண்டவமாடினர். கற்பிழந்தோர், புருசனை இழந்தோர், அங்கங்களிழந்தோர் பிஞ்சு மாங்காய் பிளந்தது போல் கோரமாய்க் கொலை செய்யப்பட்டோர் கொடுமை ...... கொடுமை......... பெருங் கொடுமைகள் தலை தூக்கி ஆடியது. ஓடி ஒளிந்து கொண்டவர்களில் முனுசாமி குடும்பமும் ஒன்று. எப்படியோ உயிர் பிழைத்தால் போதுமென்று வந்த குடும்பந்தானே. என்ன தான் இருக்க முடியும் அவர்களிடம். சொத்து பத்து என்று ஏதுமற்ற வெறுங்கையோடு வந்து சேர்ந்த கொடுமையை... யாரால்தான் தேற்ற முடியும்.

தென் பகுதியில் பாதிக்கப்பட்டவர்கள் சரி பாதிப்புறாதவர்கள் சரி எல்லோருமே யாழ்ப்பாணம் அனுப்பப் பட்டனர். வேறுவழிதான் என்ன? அகதிகள் முகாம்கள் ஏதோ நாட்டில் அமைதி ஏற்படும் வரை இயங்கின. சலுகை பெற்ற சிலர் போக உறவினருள்ளோர் உறவினரோடு சென்று கொண்டனர். சொந்த பந்தமேதுமற்ற அனாதைகள் யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலும் தங்கிக் கொண்டனர். ஒருவாறு உள்ளங்களை விட்டுப் பிரியாத உயிர்கள் உடலோடு ஒட்டிக் கிடந்து துயரோடு போராடத் தொடங்கின. இப்படியான அவஸ்தைக்குள்ளான குடும்பம்தானே முனுசாமியின் குடும்பமும். இது முனுசாமியின் கதை மட்டுமல்ல ஏக்கமிடும் எத்தனையோ சாமிகளின் கதையும் கூட.

கலவரத்தோடு யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தநாள் முதல் முனுசாமி அந்த வாகைமரத்தின் கீழ் தன் குடும்பவாழ்க்கையை ஓட்டிக் கொண்டிருந்தான். பிரச்சினைகள் இல்லாத ஒரு இடம். யாருமே சொந்தம் கொண்டாடாத ஒரு இடம் அந்த இடத்தில் தான் மரியாயி நேரம் போவதே தெரியாமல் தன் சிந்தனையோட்டத்தோடு சென்றுதிரும்பினாள்.

மாலைப்பொழுது கருகிக் கொண்டிருந்தது. ஐந்துரூபாய்க்குக்கூட அவனால் அந்தப் புல்லை விற்க முடியவில்லை. கையை விரித்து சில்லறைக் காசுகளைப் பிரித்து எண்ணியபோது நாலு ரூபா மட்டும்தான் இருப்பதை உணர்ந்தான். 'ஐந்து சீவன்கள் நான்கு ரூபாய்...... இப்படியே எத்தினை நாளாட்டம் தான் ஓட்டனும்' மன உழைச்சலோடு முனுசாமி முணுமுணுத்துக் கொண்டே தன் வீட்டை நோக்கி, கால்கள் தளர்ந்து முட்டுக்கால் தட்ட நடந்து கொண்டிருந்தான்.

இப்படியெத்தனை நாட்களுக்குத்தான் அவர்களால் பொழுதை விரட்டியடித்துக் கொண்டிருக்க முடியும்.

தீராத கொடியவறுமை.
பசிப்பிணி.........

மாறாதமனத்துயர்...... இத்தனைக்கும் மத்தியிலே முனுசாமியும் மரியாயியும் போராடிக் கொண்டிருந்தனர்.

'தர்மலிங்கம் கொன்றாக்டரெண்டு ஆரோவேலைக்கு ஆள் சேர்க்கிறாராம் நீயும் போய்ப் பாரேன் மச்சான்.' மரியாயி

# இருட்டடிப்பு!

எவருடைய பெயர் இலட்சக்கணக்கானவர்களால் படித்து மகிழப்படுகிறதோ, அந்தக் கலைஞரின் பெயர் அன்று இருட்டடிப்புச் செய்யப்பட்டது.

'அபிமன்யு' என்ற படத்திற்கு அவருக்கேயுரிய பாணியில் புதுமை கொஞ்சும் வகையில் வசனமெழுதியிருந்தார் கலைஞர். படம் வெளியிடப்பட்டபோது திரையிலே அவரது பெயரையே காணவில்லை. காரணம் கேட்டபோது "உனக்கு விளம்பரம் கிடைக்கும் போது உன் பெயரை வெளியிடலாம்" என்ற விசித்திரமான பதிலேவிடையாகக் கிடைத்தது.

தன்மான இயக்கத்தைச் சேர்ந்த கலைஞருக்கு தமது எழுத்துக்குரிய ஊதியம் குறைக்கப்பட்டாலும் பொறுத்துக் கொள்ளலாம்; தமது பெயர் மறைக்கப்பட்டதை ஒருபோதும் பொறுத்துக்கொள்ள முடியாமல் போய்விட்டது இனிமேலும் அந்தப் படக்கம்பனியில் இருப்பது தேவையற்றது என்று கருதி அங்கிருந்து வெளியேறினர்.

("கலைஞர் வரலாறு" நூலிலிருந்து)

—கதிர்மாணிக்கம்—

யாரோ சொன்ன அந்தச் சேதியை முனுசாமிக்கு சொல்லிவைத்தாள் மரியாயி. சொல்வது முனிசாமியைப் பொறுத்தவரையில் என்றுமே வேதவாக்குத்தான். முனுசாமி எப்படியோ மன உறுதியோடு சென்று திரும்பினன். 'வேலை கிடைச்சிருக்கு மரியாயி ஆனுல் வார முடிவிலே தானும் நோட்டுக்குடுப்பாங்க. நாம இருக்கிற முறையில் நமக்கு இது சரிப்பட்டுவருமா? மனச்சோர்வோடு பேசினன் முனிசாமி.

'கவலையைவிட்டுடுங்க. இம்புட்டு நாள் ஏதோ பிச்சை எடுத்துக் கிட்டாச்சும் கஞ்சி ஊத்துறன். ஒரு கிழமைக்குத் தானே மச்சான். நீ வேலைக்குப் போயிடு...... அப்புறம் சரியாப் போயிடும்.' அவளின் வார்த்தையில் கெஞ்சலும் கொஞ்சலுமாக இருந்தது. வேறுவழி ஏதுமில்லாத போது அவனுல் மறுத்து விடத்தான் முடியுமா என்ன! முனுசாமிக்கு சென்று வரத் தொடங்கி விட்டான்.

வாரம் ஒன்று கழிந்தது.

அன்று ஞாயிற்றுக்கிழமை கூலியாட்களுக்கெல்லாம் சம்பளம் கொடுப்பதாய் முதல் நாளே அறிவிக்கப்பட்டிருந்தது. ஆளோடு ஆளாக சம்பளம் பெறுபவரோடு முனுசாமியும் சேர்ந்து கொண்டான். நேரம் விநாடிகளைக் கடந்து நிமிடங்களாகி அரை மணி வரை சென்று விட்டது.

'இன்று காசு வரவில்லை வேலையைச் செய்யுங்கள் நாளைக்கு எப்படியும் சம்பளம் தரலாம்' கொன்ருக்டர் தர்மலிங்கத்தின் அறிவிப்பு இது.

முனுசாமிக்கு இதயம் நின்று விட்டது போன்ற ஒரு தவிப்பு. ரத்த நாடிகள் வெடித்துச் சிதறுவது போன்ற உணர்வு. என்ன செய்வது ஏனைய வேலையாட்கள் எல்லாம் வேலைக்களத்திற்கு செல்கின்றனர். 'எல்லோரும் செல்லும் போது நான் மட்டும்...' ஒருவாறு தன்னை சுதாரித்துக் கொண்டு முனுசாமியும் தொழிலாளரோடு சேர்ந்து கொண்டான். 'மரியாயி சம்பளம் கொண்டு வருவனென்டு காத்திருக்கப் போருள்........ நான்...........' வார்த்தைகள் உள்ளத்தோடு எரிந்து சங்கமித்துக் கொள்ள முனுசாமி வேலை செய்யத்தொடங்கினன். ஒருவாரமாகப் பட்டினியோடும் கஞ்சித் தெளிவோடும் கிடந்த முனுசாமியால் இன்று ஏனே என்றும்போல் தொழில் செய்ய முடியவில்லை. எப்படித்தான் முடியும் அவனுல். சலிப்படைந்த உள்ளம் களைப்புடைந்த உடல் இவற்ருேடு... சே........ பாவம் அவன் கண்கள் இருண்டுவரக் கைகள் சோர்ந்து கொள்ள அவன் தடுமாறினன். அவனை யாரால் தான் புரிந்து கொள்ள முடியும்.

தர்மலிங்கம் கர்ச்சித்தார். 'தொழில் செய்யப்பலமில்லாத எருமைகளைக் கட்டி அடிச்சால் நான் தாலியை விக்கவேண்டியதுதான். டேய் முனுசாமி...' அவர் குரலில் அதிகாரத்தின் ஆதிக்கம் எதிரொலித்தது.

'ஐயா...... ...........'

'நீ இந்தவேலைக்குச் சரிப்பட்டு வரமாட்டாய்........... போ........போ போய் வேறு வேலையைப்பார் ..' அதிகாரத் தொனியில் ஆணையிட்டார் தர்மலிங்கம்.

'ஐயா............நான் பிள்ளை குட்டிக் காரனுங்க.......ஏதோ இன்னிக்கு உடம்பு ஒத்துத்தர மாட்டேங்குது......அதுதான்...' பரிதாபம் நிறைந்த குரலோடு இழுத்துநிறுத்தினன்முனுசாமி.

'உனக்கு பிள்ளை குட்டியென்டா நானென்ன செய்யிறது. என்னைக் கேட்டுப் பெத்தியாடா... ......உனக்காக என் வீட்டுக்காசை நான் கரைக்கிறதா? உனக்கு இஞ்சை வேலை இல்லை நீ போகலாம்.' கண்டிப்

பார்கச் சொல்லிவைத்தார் தர்மலிங்கம்.

முனுசாமி கெஞ்சினான்.

தர்மலிங்கமோ தன் அதிகாரத்தால் மிஞ்சினார். முனுசாமியின் உள்ளம் எரிமலையாகிக் குமுறுகிறது. அந்தக் குமுறலின் விளைவோ என்னவோ அவனுடலில் அசுரபலம் எப்படியோ வந்துவிடுகிறது. இப்போது ஏதாவது செய்யவேண்டும் போன்ற ஒரு உணர்வு. தர்மலிங்கத்தின் மீது அவன் விரக்தி நிறைந்த பார்வை நிலைகுத்தி நிற்கிறது.

'என்னடா முறைக்கிறாய். உன்னை பிள்ளையளுக்கு நானே படிகட்டுகிறது... .......வாயில் வந்தபடி பொரிந்து தள்ளினார் தர்மலிங்கம்.

'ஐயா என்னைப்பற்றி எப்படிப் பேசினாலும் கேட்டுக்குவேன். ஆனா எம் புள்ளையளைப் பத்திப் பேசினா என்னாலை தாங்கேலாது.' இதயக்குமுறலிலிருந்துசிதறிய முனுசாமியின் வார்த்தை இது.

'என்னடா சொன்னே...... கள்ளத் தோணி ராஸ்கல் என்னை எதிர்த்துப் பேச யாருடா நீ ............போடா வெளியே.' தர்மலிங்கம் கத்தினார்.

'கள்ளத்தோணி.... கள்ளத் தோணி..........நான் கள்ளத் தோணி............இந்த நாட்டிற்காக உழைச்சுஉழைச்சு ஓடாய்ப் போன என்னைப்பார்த்துக் கள்ளத்தோணி என்கிறாயா?' விழிப்படைந்த முனிசாமியால் சும்மா இருந்துவிட முடியவில்லை. உணர்ச்சி மேலீட்டால் தன்னை மறந்தான். 'டேய் தர்மலிங்கம்.......... உன்னை.........' கையில் அகப்பட்ட எதையோ எடுத்து வீசினான். அப்பால் நடந்த எதையுமே அவனால் உணரமுடியவில்லை.

மயக்கம் தெளியாத நிலையில் அரசாங்க ஆஸ்பத்திரிக் கட்டிலில் முனுசாமி உணர்ச்சி அற்ற பிணமாகக் கிடந்தான். விநாடிகள் நிமிடங்களாகி நிமிடங்கள் மணிக்கணக்கில் சென்று கொண்டிருந்தன.

மின் விசிறியின் குளிர்ந்த காற்று இதமாக முனுசாமியின் உடல்மீது விழுந்து கொண்டிருந்தது. கண்கள் இலேசாக திறக்கின்றன............ கண்களை அகலத்திறந்து பார்க்கின்றான். தூக்க முடியாத பெரும்பாரமாகத் தலை கனக்கின்றது. உடல் முழுவதும் வலியெடுத்து வதையைக் கொடுத்தது. தலையிலும் கையிலும் பலமான கட்டுப் போடப்பட்டிருக்கிறது என்பதை மட்டும் அவனால் உணரமுடிந்தது. ஆனால்......... அவனால் பேசமுடியவில்லை. உடலில் வலுவில்லாத போது பேசுவது தான் எப்படியோ?

முனுசாமிக்கு உள்ளத்தின் தாக்கத்தையோ உடலின் வேதனையையோ புலப்படுத்த முடியவில்லை.அவன் நா பேசுதற்குத் துடிக்கிறது. ஆனால் பேச்சுத்தான் வரமறுக்கிறது. பேச்சிற்குப் பதிலாக அவன் கண்களிலிருந்து தாரை தாரையாகக் கண்ணீர் சொரிகிறது. ஓ வென்று சத்தமிட்டுக்கதற வேண்டும் போன்ற ஒரு சுமை அதற்குக் கூட அவனுடலில் வலுவில்லையே. பாவம்...... ... அவன் சோர்ந்த நிலையில் அப்படியே அயர்ந்து விட்டான்.

மரியாயி ஓட்டமும் நடையுமாக இடுப்பில் குழந்தையோடு ஆஸ்பத்திரிக்கு ஓடினாள். குழந்தை அவளின் ஓட்டத்தை புரிந்து கொள்ளவா போகிறது. தன் பசிக்கேற்ப அது வீரிட்டுக்கத்துகிறது.

'மச்சான்...' மரியாயியின் கதறல் ஆஸ்பத்திரிச்சுவர்களில் மோதி அங்கு நின்றிருந்தோரையெல்லாம் உலுப்பிவிட்டது. பாவம் அவள் முனுசாமியின் கட்டிலில் வீழ்ந்து கதறினாள். முனுசாமி... அவன் மீளாத் துயில் கொள்கின்றானா......? பாவம் அவள் கண்ணீரைக் கண்ட மக்கள் அந்தக் கட்டிலைச்சூழ்ந்து கொள்கின்றனர்.

வெளியே...... அந்தோ!... முனுசாமியின் ஐந்து ஆறு வயதுப் பாலர்கள் பிறந்தமேனியோடு பிச்சை கேட்டுக் கதறுகின்றனர். அவர்களுக்குப் பசி.

கதறிக்கதறிச்சக்தியிழந்த மரியாயி ஆஸ்பத்திரிவாயிலுக்கு நடைப்பிணமாக எப்படியோ வந்து விட்டாள். பாவம்......... அந்தப் பிஞ்சுக் குழந்தைகளை......... அவளால் விட்டுவிட்டு இருக்க முடியுமா? தாயின் கண்கள் கண்ணீரால் நிறைந்திருப்பதைக் கண்ட அந்தக் குழந்தைகள்... அவள் கண்ணீரைத் துடைத்தன! முனுசாமி விட்டுச் சென்ற சுமைகளையெல்லாம் இந்தச் சின்னஞ்சிறிசுகள்தான் சுமக்கப் போகின்றனவோ? ஆம்... மரியாயியின் அன்புச் செல்வங்கள் இனிச்சுமைதாங்கிகள் தான். அந்தக் குடும்பத்தின் சுமைகளையெல்லாம் தாங்க வேறு யாரிருக்கின்றனர்...?

**(யாவும் கற்பனை)**

## எல்லாம் என்னால்தான்

கோபுரத்தை சுமந்து கொண்டிருப்பது போலக் 'கோபுரம்தாங்கி' காட்சி கொடுக்கிறது. ஆனால் உண்மை அதற்கு நேர் மாறானது, கோபுரம் தாங்கியைத் தாங்குவது கோபுரம்! உலகில் எத்தனை எத்தனையோ காரியங்களைத் தாங்கிக் கொண்டிருப்பதாக மனிதன் எண்ணுகிறான், தன்னை விட மிஞ்சிய சக்தி ஒன்று தன்னைத் தாங்கிக்கொண்டிருக்கிறது என்பதை மனிதன் அறிவதில்லை. அது தான் ஆணவம்.

—நன்றி குமரிமலர்—




'பாக்கியம்.........'

அந்த சின்ன வீட்டின் படுக்கையிலே படுத்தவாறு ஜீவா அழைத்ததும் வாசலில் நின்று கொண்டிருந்த பாக்கியம் ஓடிவந்தாள்.

அவள் முகம் வெளுத்துக் காணப்பட்டது!

இத்தனை காலமும் இல்லாத பயம் அவள் நெஞ்சத்திலே நிலைபுரண்டு தத்தளித்தன; சிவந்தஅவள் உடல் நடுங்கியது; முத்தாக வியர்வை துளிர்த்தது.

படுக்கையில் புரண்டவாறு ஜீவா அவளை நோக்கினான். "என்ன பாக்கியம்! என்னமோ போல் காணப்படுகிறாயே" என்றான்.

'ஒன்றுமில்லையத்தான்' என்றவாறு டாக்டர் கொடுத்த மருந்தை நிதானமாக ஊற்றி ஜீவாவுக்கு கொடுத்தாள்.

அவனது பரிதாபமான பார்வையும் ஏக்கம் ததும்பும் சோகமும் அவளை வாட்டி வதைத்தன.

அவள் உள்ளத்தில் ஈரம் இன்னும் உலர்ந்துவிடவில்லை. கணவனது பரிதாபமான நிலை அவளை சங்கடத்துக்குள்ளாக்கியது.

அழகின் மொத்த உருவான அவளின் தக்காளிக்கன்னங்களில் கண்ணீர் உருண்டு புரண்டது.

படுக்கையிலே சாய்ந்த ஜீவா—பெருமூச்சுவிட்டான்.

அவனைப் பார்க்க அவளால் அழாமலிருக்க முடியவில்லை. நெஞ்சுக்குள்ளே குமைந்து உருகினாள். நீறுபூத்த நெருப்பென உள்ளம் குமுறியது.

ஒருநாளா இருநாளா? போதகருக்கு முன்னால் ஆலயத்தில் தாலியை எந்த நேரத்தில் கட்டினானோ ஜீவா—பத்துநாள் வாழ்வில் படுத்த படுக்கையாகி விட்டான்.

பார்க்காத வைத்தியமில்லை. ஆலோசனை கேட்காத டாக்டரில்லை. இருந்தும் பயன்?

மூன்று ஆண்டுகள் ஓடிவிட்டன பத்துநாட்கள் ஜீவாவுடன் வாழ்ந்த வாழ்வைத் தவிர வேறு எந்த சுகமும் வாழ்க்கையில் அடையவில்லை பாக்கியம்.

ஆனால்...............?

சமையல் அறையில் இருந்து வேலைபார்த்துக் கொண்டிருந்தாள் பாக்கியம். வேலையில் அவள் கவனம் செல்லவில்லை. எப்படிச் செல்லும்?

என்றைக்கோ அவள் வாழ்வில் குறுக்கிட்டுவிட்ட சந்திரன் இன்று திடீர் என வந்து நிற்பதென்றால்...... ....? அவள் விழிக்கடையில் நீர் கசிந்தது.

யாரை வாழ்வில் சந்திக்கக் கூடாது எனக் கருதினாளோ அவனை இன்று அருகில் மிக மிக அருகில் சந்திக்கும் வாய்ப்பை பெற்றுவிட்டதின் பலன்? நெஞ்சத்தின் அடித்தளத்திலே அமுந்திக்கிடந்த நினைவுகள் நீர்க்குமிழிகள் போன்றுமெள்ள மெள்ளத்தலை தூக்கின.

அன்று.........!
பாக்கியம்

இரண்டு ஆண்டுகளுக்கு முன் தாயைப் பறிகொடுத்தவள். அருள்ராஜ் அன்புக்கும் ஆசைக்கும் உரிய ஒரே மகள். அவள் கேட்டு அவர் இல்லை என்றது எதுவுமில்லை.

அவள் தந்தை அருள்ராஜ் கூப்பிட்டதும் ஆவலோடு ஓடினாள். அழகே உருவான வாலிபன் ஒருவன் அப்பாவுடன் நின்றதும் தயங்கி நின்றாள்.

"வேறு யாருமில்லையம்மா என் சிநேகிதனின் மகன் தான்! பெயர் சந்திரன் இங்கே ஏதோ வேலையாய் வந்திருக்குது நாலு நாளைக்கு தம்பி நம்மோடு தான் தங்கப் போகுது"

"சரி அப்பா......" என்றவள் சந்திரனுக்கும் சேர்த்து சமைக்கத் தொடங்கினாள். நாலு நாள் ஒட்டு உறவில் அவளும் அவனும் அன்பைக் கொட்டிக்காட்டினர்.

# வாசகர் கவனத்துக்கு

கலாகுமரிநாதன்
தாவையூர் கே. பி. காண்டீபன்
அனலை - இருபாலெட்சுமி
ஆகியோர் எழுதும்

## தோணிகள்

(முக்கோணக்கதை)

அடுத்த இதழில் ஆரம்பமாகிறது.

---

கீர்த்தல் ஒரு பைத்தியக்காரத்தனமான கொடி! தொட்டால் சிணுங்கும் இலையைப்போல்-தொட்ட உடனேயே பற்றிக் கொள்ளும் சக்தி வாய்ந்தது. நாலு நாள் வேலை என்று வந்தவன் நாற்பது நாட்கள் தங்கி விட்டான். அவளும் அவனும் வாழ்வின் சுவையை அறிய தவியாய் தவித்தனர் - அருள்ராஜ் தன் மகளை நிழல் போல் கண்ணும் கருத்துமாய் காப்பாற்றினார்.

சமுதாயத்தில் ஆண்மகன் என்ன தவறு தான் செய்தாலும் வாழ்ந்து விடலாம் ஆனால் பெண்........? ஒரே ஒரு தவறு செய்தால் கூட அவள் வாழ்ந்து விட முடியாதபடி ஊரார் அவளை ஊதிப் புடைத்து விடுவதாக இருப்பது நம் நாட்டு நிலையும் பெரிய கைங்கரியமும் கூட.

சந்திரன் ஊருக்கு புறப்படும் நாள் அருள்ராஜ் வெளியில் சென்றிருந்தார். பூனை போல வந்தவன் பாக்கியத்தின் இருகண்களையும் தன்கரங்களால் பொத்தி "பாக்கியம்..." என்றான்.

அவள் நைசாக அவனது பிடியிலிருந்து விலகி "என்ன சந்திரன்"? என்றாள். "ஊரிலிருந்து விரைவில் நல்ல செய்தியுடன் வருவேன்."

வெட்கத்தால் அவள் தலை கவிழ்ந்தாள்.

அவன் தாபத்தோடு நெருங்கி வந்தான். அவள் தீயை மிதித்த நிலையையடைந்தாள். வாழ்வின் அவலச்சுவை அறிய அவன் தவித்ததோடு அவளின் மென்மையான கரத்தை வெறியோடு பற்றினான்.

மறுகணம்

"பளார்"

அவனுக்கு எப்படித்தான் அத்தனை துணிச்சல் வந்ததோ!
அவன் திகைத்து வெளியேறினான்.

அவளால் குலுங்கிக் குலுங்கி அழுவதைத் தவிர வேறு ஒன்றும் செய்யமுடியவில்லை. மூன்று ஆண்டுகள் எப்படியோ ஓடிமறைந்து விட்டன. ஜீவா அவள் கரம் பற்றினான். பத்துநாள் வாழ்வோடு அவள் எதிர்காலம் நசிந்து விட்டது.

**இம்மாத பரிசுக் கதை**

சந்திரன் ஓகோ என வாழ்ந்தாலும் அவளது நினைவால் இன்னமும் திருமணம் செய்து கொள்ளவில்லை எனத் தெரிந்ததும் கலங்கவும் செய்தாள்.

அந்த ஒரே ஒரு சந்தர்ப்பம் மட்டும் அவள் வாழ்வில் குறுக்கிடாவிட்டால்......?

நினைக்க முடியாத சந்தர்ப்பங்களின் கூட்டுத்தான் வாழ்க்கை போலும்

இன்று அவன் திடீரென வந்தது மட்டுமல்ல "நிரோசிமா" போன்ற ஒரு வெடிகுண்டுச் செய்தியையும் சொல்லிப் போய்விட்டான்!

"பாக்கியம் காலம் முழுவதும் நோயாளியான கணவனுடன் வாழ்ந்து என்ன சுகம் கண்டு விடப்போகிறாய்? நான் இன்னமும் உன்னை மறக்காமல் வாழ்ந்து கொண்டிருக்கின்றேன். நீ மட்டும் சரி என்று ஒரு வார்த்தை சொல்லிவிடு எவரும் காண முடியாத இடத்தில் வாழ்வின் சுகமெல்லாம் அனுபவிக்கலாம், பாக்கியம்" அவன் தாபத்தோடு கூறினான்.

அமைதியான அவள் உள்ளம் புயல் சூழ்ந்த காடாகி விட்டது,

நோயுள்ள கணவன்-வாழ்வின் சுகமே அறியாத அவல நிலை! ஆனால் கைநிறையப் பணம்! கண்ணுக்கு விருந்தான காதலன்! எது?... அவள் உள்ளம் குழம்பித் தவித்தது.

எந்தவொரு முடிவுக்கும் அவள் வரமுடியாத திரிசங்கு சொர்க்க நிலை!

"பாக்கியம்......"

கணவன் அழைப்புக்கேட்டு கலங்கி இருந்த விழிநீரைத் துடைத்த வண்ணம் எழுந்து சென்ருள்.

ஆசையும் தாபமும் கொண்ட நிலையில் ஜீவா பாக்கியத்தை பார்த்தவாறு "பாக்யம்! நீ அவனுடன் போகத்தான் போகிருயா?" என்ருன்.

திடுக்கிட்ட நிலையில் அவள் அலறினுள்.

"எனக்கு எல்லாம் தெரிந்துவிட்டதே எனப் பயப்படுகிருயா? நீ என்னை விட்டுப் போகப்போவதையிட்டு நான் கலங்கவில்லை! நீ எங்காவது சுகமாக வாழ்ந்தால் அதுவே எனக்கு மகிழ்ச்சி! ஆனுல் சந்திரன் யோக்கியமானவனல்ல-பாக்கியம்! உன்னைப் போன்ற பலவீன உள்ளம் கொண்ட பெண்களை வேட்டையாடுவதே அவனின் பொழுது போக்கு! அதற்கு தடையாக இருக்கக் கூடாதே என்றுதான் இன்னும் திருமணம் செய்துகொள்ளாமல் கூட இருக்கிருன். அவன் எனக்குத் தெரிந்தவன். நீ என் மனைவி என்பதைத் தெரிந்ததால்தான் என்னைப் பார்க்க வந்தவன், உன்னையும் குழப்பிவிட்டான்! நேற்று அவன் உன்னுேடு பேசும்போது என் காதிலும் விழுந்தது பாக்கியம்."

ஜீவா தொடர்ந்தான்.

"ஒன்றை நினைவில் வைத்துக்கொள் பாக்கியம். கணவனுேடு வாழும் வரைதான் மனைவி என்ற மரியாதை கிடைக்கும். அந்த பந்த பாசத்தை அறுத்துக்கொண்டு வெளியே சென்றுவிட்டால்... ஆசைநாயகி அல்லது வைப்பாட்டி என்ற பெயர் தான் கிடைக்கும்"

அவள் விம்மத் தொடங்கினுள்.

"நம் திருமணத்துக்குமுன் சந்திரன் எனக்கொரு கடிதம் எழுதினுன், 'நீ அவனது காதலி என்று. அதையெல்லாம் பொருட்படுத்தாமல் உன்னை என்னுடையவளாக்கிக் கொண்ட நான்-என்னை உன்னிடமே தந்துவிட்டேன். என்னுடைய நோய் நாளைக்கே குணமாகலாம்! ஆனுல் சந்திரனைப் பிடித்த இந்த நோய்...'

ஜீவா பேச்சை முடிக்கவில்லை! "அத்தான் என்னை மன்னித்துவிடுங்கள்" என அவன் கைகளில் தஞ்சம் புகுந்தாள் பாக்கியம்!

ஜீவாவின் விரல்கள் அவளது தலை மயிரை இதமாக வருடின. இத்தனை காலமும் இல்லாத ஒரு மன நிம்மதி பாக்கியத்தின் நெஞ்சத்திலே நிழலாடியது.

(யாவும் கற்பனையே)

---

# இரத்ததானம் இருதய நோயைத் தடுக்கின்றது

சிட்னி மருத்துவ நிலையத்தைச் சார்ந்த லெபோல்ட் என்னும் மருத்துவர் அடிக்கடி இரத்ததானம் செய்பவர்களுடைய இரத்தம் நீரைப்போல் திர்த்து மிக வேகமாகவும் எளிதாகவும் இரத்த நாளங்களில் ஓடுகின்றது என்று கூறியுள்ளார். மாருகத் தானம் செய்யாதவர்களின் இரத்தம் கட்டிபட்டும் சிரமத்துடன் நாளங்களில் ஓடுகின்றது. சுமார் 40 ஆண்டுகள் வரை தொடர்ந்து இரத்ததானம் செய்பவர்களுக்குச் சீராக இரத்த ஓட்டம் ஏற்பட்டு இருதயநோய் வரும் தீங்கு நீங்குகின்றது என்பது அவரின் ஆய்வின் முடிவாகும்.

தகவல்: செல்வி **கே. தேன்மொழி**
அரணையக்க

# ஒரு மாணவனின் விடைத்தாளிலிருந்து

பின்வரும் சொற்களுக்கு ஒத்த கருத்துள்ள சொல் தருக:

| | | |
|---|---|---|
| (அ) | அபிவிருத்திச்சபை: | அதிருப்திசபை |
| (ஆ) | அலுவலகம் : | அரட்டையகம் |
| (இ) | ஆசிரியர் : | 'மாக்ஸ்' ரர் |
| (ஈ) | இலங்கைநாணயம்: | வெறும் கடதாசி |
| (உ) | விலைவாசி : | பரிணுமவளர்ச்சி |
| (ஊ) | பேச்சுவார்த்தை : | பேய்காட்டுக் கதை |
| (எ) | தமிழன் : | நாடற்றவன் (அகதி) |
| (ஏ) | வாக்காளன் : | ஏமாளி |
| (ஐ) | ஜனநாயகம் : | அராஜகம் (பயங்கரம்) |

**கதிர் மாணிக்கம்**

# தமிழர் பண்பாட்டில் சங்கு

பொன். பூலோகசிங்கம்

கடல் படுதிரவியங்களில் ஒன்ருன சங்கு பண்டைக் காலந்தொட்டு தமிழர் வாழ்விலும் பண்பாட்டிலும் மத அனுட்டானங்களிலும் ஒரு முக்கிய இடத்தைப் பெற்ற பொருளாக விளங்கி வருகின்றது. தமிழர் பெருமையைப் பற்றிப்பாட வந்த பாவரசன் பாரதிதாசன்,

> ''சங்கே முழங்கு தமிழ்ச் சங்கே முழங்கு
> எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
> மங்காத தமிழ் என்ற சங்கே முழங்கு''

என்று தமிழர் வாழ்வே தமிழ்தான் எனச் சங்கெடுத்து சிங்கநாதம் புரிகிருர்.

சங்கு பண்டைக் காலத்தில் போர்க்களத்தில் பெரும் பங்கு வகித்தது. வேற்றுநாட்டின் மீது படை எடுத்துச் செல்லும் மன்னர்கள் தமது போர் முழக்கமாக சங்கெடுத்து முழங்கியே போர்க்களம் புகுந்தனர். விஷ்ணுவின் படைக்கலங்களில் ஒன்ருக சங்கு விளங்குகின்றது. போர்க்கருவிகளில் ஒன்ருக சங்கு விளங்கியபடியால்தான் சங்கொலி செய்து சங்காரத்தில் ஈடுபட்டனர். இதனுல்தான் பாரதி தாசனும்

> ''பொங்கு தமிழர்க்கு இன்னல் இழைத்தால்
> சங்காரம் நிசமென்று சங்கே முழங்கு''

என சங்கெடுத்து தமிழர் சார்பில் அறைகூவல் விடுத்தார்.

பண்டைக்காலந்தொட்டு சங்கு ஒரு காவற்பொருளாகவும் இருந்து வருகின்றது. பிறந்த குழந்தையின் காலிலே தாய்மார்கள் சங்கு அணியும் வழக்கம் இன்றும் ஈழத்தில் உண்டு. பேய்கள் கணங்களிடமிருந்து சங்கு பாதுகாப்புக் கொடுக்கும் என தாய்மார்கள் இதற்கு காரணம் கூறுவர். கால்நடைகளின் கழுத்திலே விவசாயிகள் சங்கு கட்டுவார்கள். யாழ்ப்பாணக் குடாநாட்டில் வாழும் விவசாயிகள் சி காலங்களில் தமது கால் நடைகளைப் பராமரிக்க போதியளவு கால்நடை உணவுகள் கிட்டாத காலங் களில் தமது கால்நடைகளை வன்னிவள நாட்டின் வயல் களுக்கு அனுப்புவார்கள். இவ்வாறு வன்னிக்கு அனுப் பப்படும் போது காட் வெளிகளைத் தாண்டிச் செ லும் கால்நடைகளுக்கு கா லாக கழுத்தில் சங்கு கட்டு வழக்கம் இன்றும் உள்ளது

புதிதாக வீடு கட்டி கிரகப்பிரவேசம் செய்யும் பொது தமிழர்கள் சாந்தி செய் வார்கள். அப்போது வீட்டைச் சுற்றிவர நான்கு மூலையிலும் தரையில் சங்கு பதிப்பி பார்கள். வீட்டின் முன்புற வாசலிலும் இ வாறே செய்வார்கள்.

பண்டைக்காலத்தில் அரசர்கள் யாகம் செய்யும்போது யாக குண்டலங்களைச் சுற் வர சங்கு பதிப்பித்து இருப்பார்கள். இதே போல் இன்றும் ஆலயங்களில் அபிஷேகம் செய்யும் வழக்கம் இருந்து வருகின்றது. தி வெம்பாக் காலங்களில் அடியார்கள் மெய்ய யார்களைத் துயிலெழச் செய்யுமுகமாக சங் ஊதுவார்கள். அத்தோடு ஊரில் இரா காலத்தில் உலாவும் பேய்களை கலைப்பதற்கா வும் அடியார்கள் பயமின்றி ஆலயம் வர உ வுவதாகவும் குறிப்பிடுவார்கள். உண்மை தெ யாது.

எப்படியிருப்பினும் கடல்படு திரவிய களில் ஒன்ருன சங்கு பொருளாதார ரீதியான பெறுமதி மிக்கது. ஆயிர சாதாரண சங்குகளுக்கு மத்தியில் ஒ வலம்புரிச் சங்கு காணப்படும் எ கடல்படு திரவியங்கள் பற்றிய ஆராய்ச்சிய ளர்கள் குறிப்பிடுகிருர்கள். அதன் பெறுமதி யும் மிகவும் உயர்ந்ததாகும். அதனுல்தா சங்கு ஏற்றுமதிப் பொருட்களில் ஒன்ருகவு விளங்குகின்றது.

கடல்வாழ் உயிரினத்தின் கவசமான சங் அந்த உயிரினம் இறந்தபின்னே உபயோ மாகின்றது. ''சங்கு சுட்டாலும் வெண்மை தரும்'' என்ற ஆன்ருேர் வாக்கிற்கொப் அதன் இயல்பான தன்மையினின்றும் அழி படாது விளங்குகின்றது.

# நீர்க்குமிழிகள்

மண்டைதீவு கலைச்செல்வி

“எடி பிள்ளை எழும்பனடி பொழுது விடிஞ்சும் எவ்வளவு நேரமாச்சு! உச்சு வெய்யில் முதுகில படுமளவுக்கும் என்ன நித்திரை எண்டு கேக்கிறன்? வயித்துக்குள்ள என்னமோ செய்யுது எண்டு எப்பன் சுடு தண்ணி வைச்சுத்தா எண்டு கேட்டால்....நித்திரை கொள்ளுறாய்...எடி சறோ”! சறோவின் அம்மா மரியம் தான் குரல் கொடுத்தாள். கண்களை துடைத்துக் கொண்டு விழித்த சறோ தன் எண்ணெய் படாத பரட்டைத் தலையை கூட்டி முடித்துக் கொண்டு எழும்புகிறாள். அவளுக்கு அம்மா மேல் காரணமில்லாமல் ஆத்திரம் ஆத்திரமாய் வந்தது. அதே வேளை அந்த ஒட்டிய கன்னங்களையும்......குழிவிழ்ந்த கண்களையும் வரிவரியாய் புறப் பட்டிருக்கும் எலும்புக் கோர்வைகளையும்......பார்க்க அவள் மனதில்ஏதோ கசிவது போன்ற பிரமை, வெளிவளவில் சென்று பன்னாடையும் கங்கு மட்டையும் கையுமாக வந்தவள் அலுப்போடு அடுப்பை பற்ற வைக்கிறாள்.

“பெடியள் எழும்ப போகுதுகள்! உந்த மனுசன இன்னமும் காணயில்ல... ராத்திரியும் பசிக்க கிடந்ததுகள். வலைக்குள்ள விழுந்தாத்தானே வயிற்றுக்குள்ள வரும்!” புழுதி படிந்த மேலுடன் அந்த ஒரு துண்டுப் பாயில் முடங்கி கிடக்கும் தன் பிள்ளைகளை பார்த்து பெருமூச்சோடு சொன்னாள் மரியம். “இந்தாணை தேத்தண்ணி......” வெறும் சாயம் போட்ட தண்ணீர்க் குவளையை கொண்டு வந்து பட்டென்று அவள் அம்மா முன் வைத்து விட்டு கிணற்றடிக்கு போய் விட்டாள் சறோ கொஞ்ச நேரத்தில் அவள் தந்தை அன்ரனி மீன் பறியும் கையுமாக வந்து சேருகின்றார்.

“இண்டைக்கு சீர் சரியில்ல...சரியான காத்து இண்டையச் சீவியம் எப்புடிப் போகப் போகுதோ தெரியாது......!” என்று அலுத்தபடியே முற்றத்தில் கிடந்த ஒரு சாக்கை விரித்துவிட்டு அதில் சரிகிறார் அன்ரனி. மரியம் அவர் கொண்டு வந்த மீன்களை இன்னோர் கூடைக்குள் போட்டாள். “சறோ ..இந்தா நேரம் போச்சுது. இதைக் கொண்டு போய் சந்தையில கொடுத்திட்டு வா...நீ வந்தால் தான் இஞ்ச அடுப்பு புகையும்...”! என்றாள் மரியம். தன் மகளின் முகத்தை பாராது. வழக்கமாக தாய் கட்டளையிட்டவுடன் கூடையை தூக்கி கொண்டு புறப்படும் சறோ அன்று மட்டும் மௌனமாய் முற்றத்து தென்னை மரத்தோடு சாய்ந்தபடி எங்கோ வெறித்துப் பார்த்துக் கொண்டு நின்றாள்.

“என்னடி நான் சொல்லுறன் நீ எங்கையோ”...

“நான் போகமாட்டனம்மா...” என்றாள் உறுதியாக சறோ. “ஏனடி”... என்ற தாயின் அதட்டலைக் கேட்டவள்' மார்புக்கண்டையில் கிழிந்து தைக்க முடியாமல் இருக்கும் தன் சட்டையை வேதனையுடன் பார்த்தபடி மெல்ல நிமிர்கிறாள் சறோ. அவள் பார்வை மரியத்துக்கு விளங்கியதோ என்னவோ..... “என்னடி பிள்ள செய்யிறது. மூண்டு நேரத்தில ஒரு நேரம் கூட சாப்பிட வழியில்ல...எங்கட குடும்பத்தின்ர நிலையை உனக்கு தெரிஞ்சும்...” சொல்லுவதற்குள்ளாகவே மரியத்தின் கண்கள் குளமாகிவிட்டன. சறோ அவள் எதிரே சிலையாகி நின்றாள்.

அன்ரனி உடல்களையுடன்... பசிக்களைப்பும் சேர...... தன்னையே மறந்து தூங்கிக் கொண்டிருந்தார்.

“என்னால ஏலுமெண்டால் நான் போயிடுவன்...ஐஞ்சாறு நாளாய் ஒரே தலை சுத்து...... எழும்பி நடக்க ஏலுதில்ல... இண்டைக்கு மாத்திரம் போய்ட்டு வா......மீன் பழுதாய்ப் போகப் போகுது......!” மீன் கூடையை சறோ பின்பக்கம் தள்ளியபடியே சொன்னாள் மரியம். “எனக்குத் தெரியாது நான் போகமாட்டன்... சட்டை எடுத்துத் தந்தாலல்லாது........ நான் போகமாட்டன்......”! சொல்லக்கூடாது தான் ஆனால் சொல்லியே ஆக வேண்டும் என்று நினைத்தவளாய் எரிச்சல் தொனிக்க பெரிய குரலில் சொன்னாள் சறோ.'சட்டை எடுக்கிறத்துக்கு காசுக்கு எங்கபோறது? யாரும் நம்மை நம்பி ஒரு சதம் தருவினமே ? உப்புடி அறிவில்லாத கதை கதைக்காத கண்டியோ.. ...! மரியாதையாய் எடுத்துக் கொண்டு போகப் போறியோ இல்லையோ......”!

“என்னால ஏலாது ... ஒரே சட்டை.... உவ்வளவு நாளும் தோய்ச்சி தோய்ச்சி... போட்டன்...! இப்ப தையல் கூட போட முடியாத அளவுக்கு அது கிழிஞ்சு போச்சு ..நேற்றைக்கு நான் சந்தைக்கு போகேக்கை அதில நிண்ட பெடியங்களெல்லாம் பகுடி பண்ணினாங்கள்......”! மரியத்தால் பேசவே முடியவில்லை. அவளுக்கு தலையெல்லாம் சுற்றியது. “ம் சரி சரி ஏலாட்டியும் மெல்ல மெல்ல நான் கொண்டு போறன் .. ம்...” என்றபடியே மிகப் பிரயத்தனப்பட்டு அக்கூடையை தூக்கி தலையில் வைத்துக் கொண்டு அசைந்து அசைந்து நடந்தாள் மரியம்,




அவள் போவதையே பார்த்துக்கொண்டு நின்ற சரோவுக்கு உதே தாவிச் சென்று அந்தச் சுமையை வாங்க வேண்டும் போல் இருக்கிறது. ஆனால் அடுத்த கணமே நேற்று கிழிந்த சட்டையைப் பார்த்து பல் இழித்த அந்த கரிய உருவங்களை நினைக்க......மனம் கல்லாகி... அதன் அடித்தளத்திலிருந்து விரக்தியின் குருதி பீறிட்டது. "ஏன் தான் கடவுள் எங்களை உப்புடி சோதிக்கிறானோ தெரியாது......நாங்கள் என்ன சொத்து கேக்கிறோமோ சுகம் கேட்கிறோமோ கேவலம் அவன் படைத்துவிட்ட இந்த உடலுக்கு மானத்தை மறைக்க ஒரு உடையும்...கொதிக்கின்ற இந்த வயிற்றுக்கு ஒரு பிடி சோறும் தானே கேட்கிறம். இதைக்கூடவா இந்தக் கடவுளால் தரமுடியவில்லை......?'' அவள் மௌனமாக அழுதாள்.

அன்று அன்ரனிக்கு நல்ல மீன். சந்தையில் ஆதாயம். வீட்டில் சொல்லொண்ணு மகிழ்வு தாண்டவமாடியது. மரியத்துக்கோ இருந்த சில்லறைக் கடன்களை அடைத்த பெருமை. ஒவ்வொரு முகங்களிலும் வயிறு நிறைந்த பூரிப்பு. வயிறு புடைக்க சாப்பிட்டு விட்டு வந்த அன்ரனி வழக்கமாக தான் படுக்கும் சாக்கில் வந்து உட்கார்ந்தார். மற்றையப் பிள்ளைகளும் உற்சாகமாக வெளியே ஓடிப்பிடித்து விளையாடிக் கொண்டிருந்தார்கள்... "ம்...இண்டையப்போல இன்னும் இரண்டு நாளைக்கு தொடர்ந்து உப்புடி ஆதாயம் கிடைக்க வேணும். சரோவுக்கு ஒரு சட்டை எடுத்துக் குடுக்கலாம்...''! தன் சாப்பாட்டை முடித்துவந்த மரியம் செத்தையில் செருகியிருந்த வெத்திலை பார்சலை எடுத்து பிரித்தபடியே சொல்கிறாள். "சட்டை எடுத்து தா...எண்டு கேட்டு எத்தனை நாளாயிட்டுது. நீங்களாவது சட்டை எடுத்து தாறதாவது ...போயும் போயும்...உங்கட வயித்தில பிறந்தனே .'' சரோ முணுமுணுத்தாள்... "எத்தனை சட்டை எடுத்து தந்து உன்னை என்ன மாதிரி வாழ வைக்கிறன் பார்...'' அன்ரனி குறைந்த்திரையில் சொல்லிக் கொண்டிருந்தார்...... "என்ர பிள்ளையின்ர அழகுக்கே எத்தனை பேர் வருவாங்கள்...... மெய்யப்பா...'' இருந்து விட்டு ஒரு நாள் ஆதாயம் கிடைத்து விட்டால் அன்ரனியும் மரியமும் வழக்கமாக பாடும் பல்லவியைத் தான் பாடினார்கள். சரோ தன் கோபத்தை சாதித்துக் கொண்டு உள்ளே போய் விட்டாள்.

நாட்கள் மெல்ல மெல்ல உருள்கின்றன- சின்ன சின்ன தாய் சேர்த்து வைத்த அந்த பன்னிரண்டு ரூபாயையும் ஒரு ஓலைப் பெட்டிக்குள் போட்டு வைப்பதும்......... பின் அதை எடுத்து அழகு பார்ப்பதுமாய் ...ஒரு சட்டை எடுக்க மிகுதி எவ்வளவு சேர்க்க வேண்டுமென்று நாள் முழுவதும் கணக்கு பார்ப்பதுமாய்......... "இந்த முறை லீலாக்காட்டை சட்டை தைக்க குடுக்கிறதில்ல ...அவ எனக்கு ஒருமாதிரி மற்றவைக்கு ஒருமாதிரி தைக்கிறவ. ஏழையெண்டாப் போல அவையளுக்கும் சரையம்......! நான் நல்லம்மா அன்ரியட்டை குடுத்து நல்ல வடிவான கவுண் தைச்சு போட வேணும்......'' மின்னலைப் போல மனதில் பளிச்சிடும் மெல்லிய கற்பனைகள் தொடர நாட்களையும் ஒவ்வொரு ரூபாய்களையும் ஆவலுடன் எண்ணிக் கொண்டிருந்தாள் சரோ.

சோளக காற்றின் பிடிக்கு ஈடுகொடுக்கமுடியாத தென்னை மரங்கள் சோ......சோ...என்ற பயங்கர சத்தத்துடன் சந்நதம் ஆடிக் கொண்டிருந்தன. குறைச் சுருட்டு ஒன்றை பற்ற வைத்தபடி யோசனை புருவத்தினூடே நெழிய ஆட்களை விழுங்குவது போல் ஆர்ப்பரிக்கும் கடலலைகளையே வேதனையோடு பார்த்துக் கொண்டு நின்றார் அன்ரனி. எத்தனை நேரம் தான் அப்படி நின்றாரோ அது அவருக்கே தெரியவில்லை. சுய நிலைக்கு வந்தபோது. உச்சி வெய்யில் முதுகை சுட்டது. அப்பொழுதும் கடல் அடங்குவதாய் தெரியவில்லை. நெஞ்சில் துன்பமுட்கள் நெருக்கென தைக்க குனிந்த தலை

நிமிராமல் தன் குடிசையை நோக்கி நடந்தார் அன்ரனி.

அங்கு அவருடைய செல்வக் குழந்தைகள் தேங்காய் சொட்டுடன் தேத்தண்ணி குடித்துக் கொண்டிருப்பது தெரிகிறது. மரியம் ஒரு துண்டுப் பாயில் சுருண்டு போய்க் கிடந்தாள். சரோ சுவரோடு சாய்ந்தபடி கூரையினூடாக தெரியும் வானத்தை பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் கைகளுக்குள் இருந்த அந்த பன்னிரெண்டு ரூபாயையும் அவள் கொதிக்கும் வயிறு கேட்பது போல் இருந்தது. வயிறு கடல் அலைபோல் ஆர்ப்பரிக்க...வியர்வையில் நயிந்து போன அவள் சட்டை "இனியும் ஒரு நிமிஷம் கூட உன் தேகத்தில் என்னால் இருக்க முடியாது" என்பது போல் ஈய்ந்து கொண்டிருந்தது. சட்டையை ஏதோ ஒரு ஆதங்கத்துடன் பார்க்கிறாள் சரோ. கண்களில் நீர் முட்டிக் கொள்கிறது.

"ஆஸ்பத்திரிக்கு போனாய் டாக்குத்தர் என்ன சொன்னவர்......?" மரியத்திடம் அன்ரனி தான் கேட்டார். "நான் அதை எப்புடிச் சொல்ல...... பெத்ததுகளுக்கே செம்மையாய்சாப்பாடு குடுக்கவழியில்ல அதுக்குள் இன்னமொண்டு வரப்போகுதாம்...நல்ல இரத்தம் இல்லையெண்டு பிறைவற் மருந்து எழுதித் தந்தவர்...... அதுக்கு காசுக்கு எங்கபோறது ....!" மரியத்தின் நடுங்கிய குரல் சரோவின் மனதை கிழித்தது. "அம்மா...!" அவளால் அழத்தான் முடிந்தது. அவளுடைய அந்த அற்ப ஆசைகள்.....வண்ண வண்ணக் கனவுகள்...... எல்லாம் அவளுக்குள்ளாகவே கரைந்து கொண்டிருந்தன. நீர்க்குமுழிகளாக வெடித்துச் சிதறின.

(யாவும் கற்பனையே)

---

## அட்டையில்......

# கலைஞர் கருணாநிதி

கடந்த கால்நூற்றுண்டு காலமாக இலங்கையில் ஜீவமரணப் போராட்டம் நடாத்திவரும் தமிழ் மக்களுக்காக இந்நாட்டுக்கு வெளியிலிருந்து சத்தமிட்டுக் குரல் கொடுத்த உத்தமர்கள் இருவர். ஒருவர் மூதறிஞர் இராஜாஜி; மற்றவர் பேரறிஞர் அண்ணா. இராஜாஜியின் குரலிலோ சத்தியப்பிடிப்பு. அண்ணாவின் குரலில் கூடவே இரத்தத்துடிப்பு. இராஜாஜியின் குரல் கல்கிமூலம் ஒலித்தது. அண்ணாவின் குரல் கழகத்தின்மூலம் ஒலித்தது. இயக்கரீதியாக ஒலித்தமையால் அண்ணாவின் குரல் அகன்ற தமிழ் நாடெங்கும் இலங்கைத் தமிழ் மக்களுக்கான அனுதாபத் தளங்களை நிறுவின. இத்தளங்களை கட்டிக்காப்பதிலும் வளர்ப்பதிலும் முனைப்போடு செயலாற்றியவர் **கலைஞர் கருணாநிதி.** கலைஞரின் குரல் ஈழத் தமிழர் குரலின் எதிரொலி மட்டுமல்ல; மூலவொலியும்கூட.

எமது வேதனைகளையும் விசாரங்களையுமிட்டு தமிழ்நாட்டின் ஏனைய தலைவர்கள் காட்டிய அனுதாபத்தையும் அக்கறையையும் எடுத்த நடவடிக்கைகளையும் மறப்பதற்கில்லை. நன்றிப் பெருக்குடன் நினைவு கூருகிறோம். குறிப்பாக திரு. ம. பொ. சி., முதல்வர் எம். ஜி. ஆர்., திரு. ப. நெடுமாறன்., திரு. கல்யாணசுந்தரம், திரு. குமரி அனந்தன் போன்ற இன்னோரன்ன பல தலைவர்களின் ஈடுபாடு எம் சிந்தையிலே நிற்கின்றது. எனினும் கலைஞரின் பங்களிப்புக்கு ஒரு பாரம்பரியம் உண்டு— வரலாறு உண்டு.

அண்மையில் இலங்கைத் தமிழர் மீது நடாத்தப்பட்ட தாக்குதல் குறித்து தமிழ் நாட்டில் அனைத்துக்கட்சிகளும் கொதித்தெழுந்தன. வேதனையிலும் நாம் பெருமிதத்தால் விம்மினோம்.

கலைஞர் களம் கண்டார். கலைஞருடன் கழகத்துப் பாராளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், முன்னணித் தலைவர்கள் பலரும் போராட்டத்தில் ஈடுபட்டுச் சிறைவாசம் ஏற்றனர். தமிழ்நாட்டு அரசியல் அரங்குகளில் மாற்றுக் கட்சிகளால் பலவாறு விமர்சிக்கப்பட்டாலும், தமிழ்நாட்டில் கலைஞரும், தி. மு. கழகக் காளையரும் போராட்டம் நடாத்திச் சிறைப்பட்டமை, எமக்கு இரு முனைகளில் தேட்டங்களைத் தந்திருக்கிறது: (1) இந்நாட்டுத் தமிழன் தனித்தவனல்ல என்பதைச் சிங்கள அரசுக்கு உணர்த்தியிருக்கிறது. (2) தமிழ்நாட்டு வரம்புகளுக்குள் மட்டும் தாக்கமாக இருந்த எமது பிரச்சினைகளை குமரி தொட்டு இமயம் மட்டும்—அகில இந்தியாவிலும்— அறிமுகப்படுத்தியிருக்கிறது. கலைஞரையும் ஏனைய சிறைமீண்ட செம்மல் களையும் நன்றியுடன் வாழ்த்துகிறோம்.

# தமிழனுக்கு பாரதியின் தத்துவங்கள்

கெ. தர்மகுலராசா

தமிழா! தெய்வத்தை நம்பு. பயப்படாதே உனக்கு நல்ல காலம் வருகின்றது.

**தெம்பு:** உனது ஜாதியிலேயே உயர்ந்த அறிஞர்கள் பிறந்திருக்கின்றார்கள். தெய்வங் கண்ட கவிகள், அற்புதமான சங்கீத வித்துவான்கள், கைதேர்ந்த சிற்பர், பல நூல் வல்லார், பல தொழில் வல்லார், பல மணிகள் தோன்றுகிறார்கள், அச்சமில்லாத தர்மிஷ்டர் பெருகுகின்றார்கள். உனது ஜாதியிலே தேவர்கள் மனிதர்களாக அவதரிக்கிறார்கள். கண்ணை நன்றாகத் துடைத்துவிட்டு நான்கு பக்கங்களிலும் பார். ஒரு நிலைக்கண்ணாடியில் போய்ப் பார்.

தமிழா! பயப்படாதே, ஊர்தோறும் தமிழ்ப் பள்ளிக் கூடங்கள் போட்டு ஐரோப்பிய சாஸ்திரங்களை எல்லாம் தமிழிற் கற்றுக் கொடுக்க ஏற்பாடு செய்.

**ஜாதி:** ஜாதி வேற்றுமைகளை வளர்க்காதே, 'ஜாதியிரண்டொழிய வேறில்லை' என்ற பழந்தமிழ் வாக்கியத்தை வேதமாகக் கொள். பெண்ணை அடிமை என்று கருதாதே. முற்காலத்துத்தமிழர் மனைவியை "வாழ்க்கைத் துணை" என்றார். ஆத்மாவும் சக்தியும் ஒன்று. ஆணும் பெண்ணும் சமம்.

வேதங்களை நம்பு. அவற்றின் பொருளைத் தெரிந்து கொண்டு பின் நம்பு. புராணங்களைக் கேட்டு பயனடைந்து கொள். புராணங்களை வேதங்களாக நினைத்து மடைமைகளை பேசி விலங்குகள்போல் நடந்து கொள்ளாதே.

**பண்பு:** தமிழா, உன் வேலைகள் அனைத்திலுமே பொய்க்கதைகள் மிதமிஞ்சி விட்டன. உனது மதக் கொள்கைகள், லௌகீகக் கொள்கைகள், வைதிக நடை எல்லாவற்றிலுமே பொய்கள் புகுந்து தலைதூக்கி ஆட இடங் கொடுத்து விட்டாய். இவற்றை நீக்கி விடு. வீட்டிலும், வெளியிலும், தனிமையிலும், கூட்டத்திலும் எதிலும் எப்போதும் நேர்மையிருக்கவேண்டும். உண்மையிருக்க வேண்டும். நீயும் பிறரை வஞ்சிக்கலாகாது. பிறரும் உன்னை வஞ்சிக்கலாகாது. பிறர் பிறரை வஞ்சிப்பதையும் நீ இயன்றவரை தடுக்கவேண்டும். எல்லாப் பேறுகளைக் காட்டிலும் உண்மைப் பேறுதான் பெருமை கொண்டது. உண்மை தவங்களுக்கெல்லாம் உயிர். உண்மை சாஸ்திரங்களுக்கு வேர். உண்மை இன்பத்திற்கு நல்லுறுதி. உண்மை பரமாத்மாவின் கண்ணாடி. ஆதலால் தமிழா, எல்லாச் செய்திகளிலும் உண்மை நிலவும்படி செய்.

**அறிவு:** தமிழா! எழுதிப் படிப்பதெல்லாம் மெய்யுமில்லை, எதிர் நின்று கேட்பதெல்லாம் பொய்யுமில்லை. "முந்திய சாஸ்திரம் மெய் பிந்திய சாஸ்திரம் பொய்" என்று தீர்மானஞ் செய்து கொள்ளாதே. காலத்துக்கும் உண்மைக்கும் எதிரிடையாக ஓர் கணக்கு ஏற்பட்டிருக்கிறதா? "தகப்பன் வெட்டிய கிணறு என்று சொல்லி மூடர்கள் உப்பு நீரைக் குடிக்கின்றார்கள்" என்று பஞ்சதந்திரம் நகைக்கின்றது.

**அர்த்தங்கள்:** இவ்வுலகில் நான்கு புருஷார்த்தங்கள் என்று பெரியோர்கள் காட்டியிருக்கிறார்கள். அவை அறம், பொருள், இன்பம், வீடு - என்பன.

இவற்றுள் அறமாவது கடமை. அது உனக்கும் உனது சுற்றத்தார்க்கும் பிறர்க்கும் நீ செலுத்த வேண்டிய கடமை. பிறர் என்பதனுள் வையகம் முழுதும் அடங்கும். கடமையில் தவறலாகாது. தொழில்களெல்லாம் நற்பயன் தருமிடத்து அறங்களாகும்.

பொருள் என்பது செல்வம். நிலமும் பொன்னும் கலையும் புகழும். நிறைந்திருத்தல், நல்ல மக்களைப் பெறுதல், இனப்பெருமை சேருதல், இவையெல்லாம் செல்வம். இச் செல்வத்தைச் சேர்த்தல் மனித உயிருக்கு ஈசன் இட்டிருக்கும் இரண்டாம் கட்டளை.

இன்பம் என்பது இனிய பொருள்களுடன் உயிர் கலந்து நிற்பது. பெண், பாட்டு, கூத்து, முதலிய ரஸ வஸ்த்துக்களை அனுபவிப்பது. இவ்வின்பங்களெல்லாம் தமிழா, உனக்கு நன்றாக அமையும்படி பராசக்தியருள் புரிக! உன்னுடைய நோய்களெல்லாம் தீர்க! உனது வறுமை தொலைக! உனக்கு இனிமையும் அழகுமுடைய வஸ்த்துக்களெல்லாம் வசப்படுக! நீ எப்பொழுதும் இன்பம் எய்துக!

வீடாவது பரமாத்மாவுடன் அறிவு கலந்து நிற்பது. "வீடு" என்ற சொல்லுக்கு "விடுதலை" என்பது பொருள். மேற்கூறப்பட்ட மூன்று புருஷார்த்தங்களும் ஈடேறிய பெரியோருக்கு ஈசன் தானாகவே வீட்டு நிலையருள் செய்வான். தமிழா, உனது புருஷார்த்தங்கள் கைகூடுக!

# காவியமானவள்

## குறுங்காவியம்

அனலை - ஆறு - இராசேந்திரம்

வெள்ளை நிறத்தொரு சேலை அணிந்தவள்
வெண்புறாப் போல் வருவாள் — நகை
அள்ளி எறிந்தயல் பார்க்க நடந்திடும்
அன்னமாய் மின்னிடுவாள் — சிறு
பிள்ளை மனத்திலே துன்பதுயரங்கள்
சூழ்ந்திட ஏதுமில்லாள் — புகழ்த்
தெள்ளுதமிழினில் செல்வி சிறப்பினைச்
செப்புதல் எப்படியோ?

பள்ளியின் வாயிலிற் பாவை எடுத்தடி
வைத்திடும் போதினிலே — எமை
அள்ளிடும் அத்தரின் வாசனை வந்து
வகுப்பிற் புகுந்துவிடும் — "அடி
கொள்ளை எழில் மயில் போலக் கலக்(கு)கிறாய்
என்னடி" என்றிடிலோ — உடன்
கிள்ளி நகைமலர் வீசிடுவாள் அது
கோடி பணம் பெறுமே.

எங்கள் உயர்நிலைக் கல்வி நிலையத்தின்
ஊர்வசிப் பெண் புனிதா — அவள்
திங்கள் முகம் ஒருநாள் இலை என்றிடில்
தீயிடை வண்மலர் போல் — மனம்
நொந்து குமைந்து நொடிந்திடும் வாலிபர்
ஒன்றல்ல பன்னிருவர் — அன்று
சிந்தையில் அன்னவள் கோலம் படமிடச்
சிந்தனை விட்டிருப்பர்.

"கொத்து மலர்க்கொடி போல இருக்கிறாள்
கோல எழில் மயிலை — நான்
வைத்து மனைவியாய் வாழ்க்கை தொடர்ந்திடப்
பேறு கிடைத்திடுமோ? — தினம்
மெத்தைநிகர் அவள் மென்மடி மீதினில்
தூங்கும் சுகம் வருமோ?" — எனப்
பித்துப் பிடித்த விண் கோட்டைகள் கட்டிய
நண்பர்கள் பற்பல பேர்.

"பஞ்சுநிகர் விரற் பாவை கரங்களாற்
கட்டி அணைத்திடுவாள் — தினம்
கொஞ்சி மகிழ்ந்தவள் கோவை இதழ்களிற்
கொள்ளை மதுக்குடிப்போம்" — என
மிஞ்சி வளர்ந்திடும் மையலில் வாலிபர்
நைந்து மிக மெலிந்தார் — அவர்
நெஞ்சிற் புதுப்புது ஆசை வளர்ந்தது
ஆக்கம் கிடைக்கவில்லை.

தொடரும்

# ஒரு நூற்றாண்டின் இரு தமிழ் நாவல்கள்

எஸ். அகஸ்தியர்

தமிழ் நாவல் இலக்கியத்தின் ஒரு நூற்றாண்டு நிறைவினையொட்டி அண்மைக்காலத்தில் இந்தியாவிலும் ஈழத்திலும் பல இலக்கிய விழாக்கள் 'விமரிசை' யாக நிகழ்த்தப்பட்டன. பத்திரிகைகள், சஞ்சிகைகள், வானொலிகள் போன்ற அரிய சாதனங்களும் முறையாகப் பயன்படுத்தப்பட்டன.

பழம்பெரும் இலக்கியக்காரர்கள், இலக்கிய விமர்சனத்தில் 'ஆளுமை' பெற்றவர்கள், இலக்கிய களத்தில் காலடி வைத்தவர்கள், இலக்கியப் பேச்சாளர்கள், இலக்கிய தரிசனத்திற்கான கன்னித்தவத்தினர்—இவ்வாறு பலதரப்பட்ட கலைஞர்கள் சரித்திர ஓட்டமாகவும், கணக்கெடுப்புத் தோரணையாகவும், விமர்சன ரீதியாகவும் மேற்குறிப்பிட்ட பிரசாரக் கருவிகளை 'வாறாக'ப் பயன்படுத்தினர்.

இவ்வாறு ஒரு நூற்றாண்டுத் தமிழ்நாவல் இலக்கியம் பற்றியெல்லாம் 'நீ முந்தி நான் முந்தி' என்று 'அடித்து விழுந்து' பிரசுரித்த இலக்கியக்காரர்களிடமிருந்து வெளிச்சமான ஓர் உண்மை இருளாகி வெளிவர மறுத்து நின்றது. சத்திய இதயம் இருண்டு கிடந்தது; சரித்திர உண்மை மறைக்கப்பட்டது.

எந்த விவகாரத்திலும் சம்பவங்களை மறைப்பதோ அன்றேல் மறப்பதோ ஒரு போதும் தற்செயலாக நிகழ்வதில்லை. மறைப்பவர்களின் நினைவில் அவை மிதமாகவிருப்ப தனாற்றான் மறைக்க—மறக்க வேண்டி வருகிறது.

'ஈழத்து இலக்கிய வளர்ச்சி', 'ஈழத்தில் தமிழ்நாவல் வளர்ச்சி', 'இருபதாம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழ் இலக்கியம்', 'ஈழத்துத் தமிழ் நாவல் இலக்கியம்' என்றெல்லாம் சரித்திர ஆய்வு நூல்கள் எழுதிய—எழுதுகின்ற இலக்கிய காரர்கள், இலக்கியக் களத்தில் நிலைபிறழாது சத்தியப் பேனா தூக்கித் தாக்கமான சமூகவியற் படைப்புகளையளித்த காத்திரமான இலக்கியவாதிகளை மறைப்பதற்காகவே மறந்துவிட்டு, இலக்கிய தானடிதத மூப்பு, சலசலப்பு, உதறல், சந்தர்ப்பவாதம், வாயாடித்தனம், தற்புகழ் வெறி, 'நான்' என மார்பு தட்டும் வீம்பு— இப்படியெல்லாம் கூச்சமின்றிக் கோணங்கித்தனம் பண்ணுவோர்க்குப் 'பணிந்த' விரகதாபத்தில், இப்பேர்ப்பட்ட அந்தஆசாமிககளையே 'வலிந்து' பிரமாதப்படுத்திக்கொள்கின்றார்கள்.

ஆட்சிமாற்றத்திற் கொள்வோர் ஆள்மாறியாப் புனர் ஜென்மம் எடுக்கும் பேர்வழிகள் வேறு 'இலட்சியம்' பற்றிப் பேசுகின்றார்கள். இவைமட்டுமா? 'சாகித்திய மண்டலப்பரிசுகள்', 'இலக்கியப் போட்டிப் பரிசுகள்' என்று வேறு 'வைத்து'ம் நவீன போட்டி இலக்கியத்தை மிக மோசமாகப் 'பரிசுகெடுத்து'ள்ளார்கள். 'ஈழத்து இலக்கியம் மலினபப்படுத்தப்பட்டுள்ளது' என்று நாம் கூறும்போது, அதனையும் 'ஆமாம் சாமி' என்று இவர்களே அதிகம் உரத்தும் கூச்சல் போடுகின்றார்கள். இந்தக் கூச்சல்காரர்களின் 'அந்தரங்கம்' என்னவென்பதை நாம் அறிவோம். அன்றும் இத்தகைய வணிக நச்சு இலக்கியவாதிகளே பாரதி—புதுமைப்பித்தனை இப்படி வதைத்துச் சாகடித்தார்கள். ஆனால், பாரதி—புதுமைப்பித்தன் இலக்கியங்களை அவர்களால் சாகடிக்கமுடியவில்லை. சாகடிக்கவும் முடியாது. ......'

பேடி ஒருவன் கோழைத்தனமாக மறைந்து நின்று சுத்தவீரன் கண்ணில் மிளகாய்ப் பொடி வீசுவதுபோன்று இக் கைங்கரியத்தை, 'உலகம் விழுங்கி' களான இந்த இலக்கியக்காரர்கள், எழுத்தாளன் குரல்வளையையே நெரித்துக் கொல்வதுபோல திட்டமிட்டு அவன் படைப்புகளை இருட்டடிப்பில் மறைப்பதானது, எரிநெருப்பில் கருகாமல் முளைவிட்டுக் கிளர்ந்த எம்மைப் பொறுத்தவரை ஒன்றும் புதியதல்ல; புதுமையுமல்ல. ஆனால், பொதுமக்கள் சொத்தான வானொலி போன்ற சாதனங்களையே இடம், ஏவல், பொருள் நுகர்ந்து போலி நக்கீர வேஷம் பூண்டு, சந்தர்ப்பவாதக் கட்சி கட்டி, தமது குடும்பச் சொத்தாக வரித்துக் கொண்டு, கல்யாணத் தரகனின் பிரசார ஆவேசிப்பில் பாவித்து, தமது 'கிணற்றுத் தவளைப்பார்வை' யையும், அதன் பாய்ச்சலையும் வெளிப்படுத்துவதுதான் ஆகவும் சின்னத்தனமானது; பெரும் வேடிக்கையானது. இந்தக் கிதிசகேட்டினால் தற்கால இலக்கியக்களம் 'ராமன் இல்லாத ராமகாதை' யாகி, பெரும் நீசத்தனமாக— மிக மோசமாக நச்சுப்படுத்தப் பட்டுள்ளது.

பொதுமக்கள் சாதனங்களில் இத்தகைய சந்தர்ப்பவாதக்கட்சிகட்டிகள் இலக்கியத்திற்கே பச்சைத்துரோகம் செய்துகொண்டு

இப்படிக் 'கோயில் மேளம்' அடிப்பதைநிறுத் தாவிடின், ஈழத்துக் கலை இலக்கியக்களமே அர்த்தமற்றதாகிவிடும். இந்தத் ' தனித்தர் பார் ' ராஜ்யத்தை நமது வாசகர்கள், பொதுமக்கள், இலக்கியப் படைப்பாளிகள் தொடர்ந்தும் அனுமதிக்கக் கூடாது.

ஒரு நூற்றாண்டுத் தமிழ் நாவல் இலக்கி யம் பற்றி மதிப்பிட்ட இந்த இலக்கியக்கா ரர்களோ சகல கலைக்கழகங்களையும் கண்டு தேறியவர்கள். அறுபத்து நான்கு கலைக்கியா னங்களையும் கரைத்துக் குடித்தவர்கள். இருந்தும், இந்தக் கிணற்றுத் தவளைப் பார் வையும் பாய்ச்சலும் இவர்களுக்குச் செப்ப மான கலையாகத்தெரிகிறது.

மனிதகுலத்தின் ஒளிமயமான வாழ்விற் கென்று புதிய சமூக விஞ்ஞான இயக்க இயல் தத்துவத்தைத் தோற்றுவித்த கார்ல் மார்க்ஸ்ஸை நிராகரித்துவிட்டு உலகில் எவ் வாறு புதிய மக்கள் ஜனநாயக சமத்துவ சமுதாய நீதியை நிர்ணயிக்க முடியாதோ, ஈழத்துத் தமிழ்கலை கலாசார இலக்கியப் பரப்பில் நமது ஆறுமுகநாவலரை நழுவ விட்டு எவ்வாறு ஈழத்துத் தமிழ் இலக்கியப் பாரம்பரியத்தைப் பறைசாற்ற முடியாதோ அவ்வாறே ஈழத்துத் தமிழ்ச் சிருஷ்டி இலக் கியப் பரப்பில் நாவல் இலக்கியத்தை முதன் முதற் தோற்றுவித்த நமது ஜனுப் சித்தி லெப்பை அவர்களை மறைத்துவிட்டுத் தமிழ் நாவல் இலக்கிய வவர்ச்சி - வரலாறுபற்றிப் பிரஸ்தாபிக்க முடியாது.

இந்தியாவில் ' பிரதாபமுதலியார் சரித் திரம் ' நாவல் மூலம் தமிழ் நாவல் இலக்கி யத்தைத் தோற்றுவித்த முதல்வராக வித் வான் திரு. ச. வேதநாயகம் பிள்ளை அவர்க ளைத் தமிழ் இலக்கிய உலகம் மறவாமல்— மறைக்காமல் சரியாகவும் முறையாகவும் மதிப்பிட்டிருக்கும் போது, அதே காலத்தில் ' அசன்பே சரித்திரம் ' நாவல் மூலம் ஈழத் தில் தமிழ் நாவலை முதற் சிருஷ்டித்த அறி ஞர் ஜனுப் சித்திலெப்பை அவர்களை ஈழத்து இலக்கிய உலகமேனும் முறையாகவும் சரி யாகவும் குறிப்பிடாமல் - மதிப்பிடாமல் ' மறந்து ' விட்டது ஏன்?

சில ஆண்டுகளாக இக்கணையை என்னுள் தொடுத்து இதனைத் துருவிப் பார்த்தேன் விஷயம் பிடிபட்டது. ' விபரபுத்தி நாசகா லம் ' போலும், என்னுள் புழுங்கிக் கொண் டிருந்த இக்கேள்விக்கணையே இச் சிறு ஆய்வு ரையை எழுத என்னை உந்தியது. இதன்படி நோக்கின் முழு இருட்டடிப்புக்குள்ளான அறிஞர் சித்திலெப்பையின் ' அசன்பே சரித் திரம் ' நாவலையே ஆய்வு செய்திருக்க வேண் டும். நம்போன்ற ஈழத்து இலக்கியக்காரர் இந்தியத் தமிழிலக்கியப் பாரம்பரியத்தை யும் புறகணிக்கவில்லை ' என்பதனைக் காட்ட வும், ஈழத்து நாவலைக் கண்டெடுத்தும் பார்க்காமல்விட்ட இந்தியத் தமிழிலக்கிய வாதிகளின் தவறுகளை நிவர்த்தியனுகூல மாக்கி, இன்றைய எமது ஈழத்து - இந்திய வாசகர்களுக்கும் பொது மக்களுக்கும் படி மப் படுத்தியுணர்த்தவுமே அக்காலத்தில் வெளிவந்த இரு நாவல்களையும் ஒருசேர ' ஒப்பாய்வு ' செய்து, ' ஒருநூற்றாண்டின் இருதமிழ் நாவல்கள் ' என்ற தலைப்பில் எழுதினேன்.

விமர்சனம் ஒரு கிளை; ஒப்பாய்வு இரு கிளை. ஒப்பாய்வு என்பது கத்தி விளிம்பில் கால் வைத்து நடந்து செல்லும் விஷப் பரீக்ஷை. எனினும், இப்பரீக்ஷையின் பேருக முன் குறிப்பிட்ட என் நோக்கம் வாசகர் களுக்கு - இலக்கிய ஆர்வலர்களுக்குச் சென்ற டையுமாயின் அதுவே எனக்குத் திருப்தி.

ஆய்வுக்கு இருநாவல்களையும் தந்துதவிய இனிய நண்பர் தேசாபிமானி பி. ராமநாதன் அவர்களுக்கு நன்றி. அழகாகப் பிரதிபண் ணிய என் புதல்வி நவஜோதிக்கு ஒப்பரிகை.

தொடரும்.

---

பொன்னுலகம் காண்பேன் பொங்கும் கவி மழையில்
மண்ணுலகைத் தோய்த்து மயக்கம் பிணக்க வைப்பேன்''

(கண்ணதாசன்.)

---

# நெஞ்சத்தில் ஏற்றிய நெருப்பு!

வானுயர் கட்டிடங்கள்
வனப்புறு மாளிகைகள் — புது
மெருகழியா வாகனங்கள்
புத்தகசாலைகள் பத்திரிகையாலயங்கள்
ஏதுமறியா ஏழைகள் இல்லங்கள்
எல்லாமே ......... எல்லாமே
நாசமுறப்பண்ணி நாற்புறமும் தீவளர்த்தாய்!

அரியநூல் பொக்கிசத்தை அறிவொளிர் ஆல யத்தையும்
அழித்தவனே அந்தகனே — நீ!
மாணவர் துடித்தனர்
மா அறிஞர் கலங்கினர்
அடிகள் உயிரையுமிழந்தார் — அந்தோ!
அப்பாவிகள் நெஞ்சத்தில் ஏற்றிய நெருப்பு
அப் - பாவியாகிய உன்னையே ஒருநாள் எரிக்கும்.

வதனு - தம்பிஐயா.

# கவிச்சரங்கள்

## விலைவாசி!

—கலா குமரிநாதன்—

அழுதாலும் தீராத அல்லல்
தந்து
அழுத்துகின்ற விலைவாசி
தன்னை நோக்கின்,
விளையாத ஓர் பயிரைக் கல்
தரையில்,
விளைவித்த கதைதானே
நினைவில் தோன்றும்!

## இரும்போ!

—வேலணையூர் சு. கருணாநிதி

மனிதா
உன்னில் பலரைச்
சிலர்
கல்நெஞ்சனென்கின்றார்
பாலைவனத்து
கல்லையுடைத்தாலும்
பாறைக்குள்ளிருந்து
நீர் வருமன்றோ
அப்படியானால்
உன்நெஞ்சென்ன
இரும்போ!

## பசிவர்க்கம்

**வி. ஆர். தங்கவேல்**

வீதியோரத்தில்
விளக்கின் வெளிச்சத்தில்
துயில் கொள்ளும்
ஜீவன்கள் ..........
நாளையப் பொழுதினில்!......
நடைப்பிணங்களாகி
நக்கிக்கழிக்கும்
பண்டங்களை........
ருசிபார்க்கும்
வர்க்கங்கள்.

## ம(ா)து சொல் கேளேல்?

— முருகு —

மனைவியின் சொல்லையும்
கேட்டு நடந்தால்
தன்னை ஊரார்
பெண்டாட்டிதாசன்
என்று இகழ்வார் -
மானம் போய்விடும் -
என அஞ்சியவர் -
"தையல் சொல்கேளேல்"
என முழங்கியவர் -
இப்போது -
மதுவின் சொற்படி
நடக்கின்றார் - இல்லை
ஆடுகின்றார்!
அவரைப் பார்த்து
ஊர் சிரிக்கிறது!!
மானம் போகிறது!
ஆனாலும் அவருக்கு
எதுவுமே தெரியாது!
அவருக்கு எவ்விதக்
கவலையு மில்லை!!

## அறியாயோ சாதி?

—கண்ணன்—

ஆரியதாசா வைக்
காதலித்த கன்னியவள்
கலியாணமும் செய்துகொண்
டாள்
அவள் தங்கையைக் காதலித்த
கந்தன் மகன் ரவிகுமார்
கட்டி வைத்து
அடிக்கப் பட்டான்
அட
ஆரியதாசனின்
சாதி அறிவாயோ
பாவித் தமிழா?

## 'கடன்'

—ஞா. சிவா—

உடலை மெலித்து,
உள்ளத்தை வாட்டும்.
படலை திறக்கும்போது,
பயம் மிகக் கூடும்.

## காற்று

—மா. இராஜலிங்கம். —

ஒய்யாரமாய்...........
ஓய்ந்திருக்கும்
முதலாளிக்காக,
நாள் முழுதும்
வியர்வை சிந்த,
வெயிலில்......
மாடாய் உழைத்தும்;
அடிக்கடி
சோர்ந்திடும்,
உணவற்ற,
ஏழையின்
பட்டினியுடல்;
மரணித்து,
ஓய்ந்திடாது......
காத்திடும்;
கருணை மிகு
தெய்வம்!

## புதிய ஆக்கம்!

—ஸ்ரீதேவிப்ரியா.—

சோர்ந்துகிடந்து மானிடனே...
சொர்க்கம் காண முடி
யாது...
நேர்ந்த துன்பம் தனைநினைந்தே
நிம்மதி காண முடியாது.
வீழ்ந்துகிடந்தே கால மெலாம்
வீணாய் பொழுதை கழிப்
பது மேன்?
ஆழ்ந்து சிந்தனை செய்தே நீ...
புது
ஆக்கம் புரிந்திட வேண்டு
மடா?



**கேட்டாலே பசி தீரும்**

**சர்வர்:** "என்ன ஹோட்டலுக்கு வந்துட்டு சாப்பிடாமா போறீங்க...?"

**வந்தவர்:** "விலைகளை கேட்டதிலே பசி தீர்ந்து போச்சு......!"

**சர்வர்;** ?!?!?..........."

—சிரிப்பய்யா

* * *

**வேலைக்காரன்:** என் பெயர் ஆறுமுகம் என்று தானே சொன்னேன், ஏழுமுகம் என்று அழைக்கிறீர்களே எஜமான்?

**எஜமான்:** உன் முகத்தையும் சேர்த்துத் தான் ஏழுமுகம் என்று அழைக்கின்றேன்!

* * *

"பெல்மதுளையில் பாதிக்கப்பட்ட தமிழரிடம் ஜனதிபதி "உங்களுக்கு கோழிதாறது-முட்டையும் தாறது" என்று தமிழில் கூறினராமே; அதற்கு என்ன அர்த்தம்?"

"உங்களுக்கு அரசு தராது - முட்டையும் (ஒன்றும்) தராது என்று அர்த்தம்"

* * *

**டாக்டர்:** உமது இருதயத்தில் துவாரம் இருக்கிறது ... ஆப்ரேஷன் செய்துதான் குணப்படுத்த வேண்டும்......

**நோயாளி:** வேண்டாம் டாக்டர், இருதயத்தில் துவாரம் இல்லா விட்டால் சுவாசிக்க முடியாதே!

—கதிர்மாணிக்கம்

* * *

**ஒருவர்:** யாராலும் கண்டுபிடிக்க முடியாத ஒரு புனைபெயர் சொல்லுங்க...

**மற்றவர்:** சீ. ஐ. டி. ன்னு வைச்சுக்குங்க.

* * *

**நீதிபதி:** நீ அந்த பெண்ணைக் கடத்தியது உண்மையா......?

குற்றவாளி: ஆமாம் ஐயா

நீதிபதி: உன்னுடைய பெயர்?

குற்றவாளி: ராவணனுங்க.

* * *

**அவர்:** சீதனம் 'மோட்டார் சைக்கிள்' கேட்ட மாப்பிள்ளைக்கு 'காரே' வாங்கித் தர்றதா சொல்லீட்டிங்களாமே......?

**இவர்:** அட நீங்க ஒன்னுங்க .. அவன் மோட்டார் சைக்கிள்ள போய் மண்டைய போட்டான்னு என் பொண்ணு கதி என்னுகிறது?

—புதுமைப்பிரியன்—

## ஒரு செய்தி

ஆவியுலகத்திலிருந்து பயங்கரவாதிகளின் ஆவிகள் சில ஹிட்லரின் தலைமையில் உலகச் சுற்றுப்பயணம் ஒன்று மேற்கொண்டு வந்தன. ஒவ்வொரு நாடாக சுற்றிவிட்டு கடந்த மாதத்தின் நடுப்பகுதியில் இலங்கைக்கு வந்த அக்குழு வந்த சில மணித்தியாலங்களிலேயே ஓலமிட்டவாறு உயிர்தப்பினல் போதுமென்று ஓட்டம்பிடித்தது.

காரணம், நாடெங்கிலும் கொலை, கொள்ளை, கற்பழிப்புகள். பயங்கரத் தின் உச்சக்கட்டம். தங்களைவிட கொடியவர்களை கண்டால், ஓட்டமெடுக்காமல் உல்லாசப் பயணமா செய்வார்கள்.........?

* * *

" எங்க தாத்தாவை பயங்கர வாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்து விட்டார்கள்"

"ஏன்? என்ன விஷயம்?

"அவருக்குக் கடுமையான வாதநோய்"

தகவல்:— **புதுமைப்பிரியன்.**

* * *

**தோட்டத் தொழிலாளியின் மகன்:** அப்பா தார்மீகம் என்ருல் என்ன!

**தந்தை:** அதுவா நாம் வாரத்தில் நான்கு நாள் வேலை செய்வது நான்கு நாள் சாப்பிடுவது மூன்று நாள் பட்டினி கிடப்பது.

* * * *

**ஆசிரியர் மாணவனிடம்:** நமது தார்மீஸ்ட் ஆட்சியைப் பற்றி நான்கு வசனம் கூறு பார்க்கலாம்!

**மாணவன்:** கொலை, கொள்ளை, தீவைப்பு, கற்பழிப்பு!

—பாபு, பள்ளக்கெட்டுவ

# சுடர் வாசகர் வட்டம்

## அங்கத்தினர்கள்

சுடரின் பணியை விரிவுபடுத்தும் நோக்கத்துடன் நாம் அமைத்திருக்கும் வாசகர் வட்டத்தில் உறுப்பினர்களாக சேர விரும்புவோர் ஒருவருட சந்தா (ரூ. 25-00)தொகையுடன் தங்களை பதிவு செய்து கொள்ளலாம். ஒவ்வொரு உறுப்பினர்களுக்கும் ஒவ்வொரு இலக்கம் தரப்படும்.

சந்தாத் தொகை அனுப்புவோர் தமது காசுக் கட்டளை அல்லது தபாற் கட்டளையில் 'நிர்வாகி' சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்' என குறிப்பிடுதல் அவசியமாகும்.

-ஆசிரியர்

155. **தோமஸ் அமலதாஸ்**
சென் ஜோசப் செமினரி
பூர்ணவத்த
கண்டி

156. **மு. அருளைமராசா**
கெருடாவில் தெற்கு
தொண்டமானாறு

157. **செல்வி லோ. தமிழ்ச்செல்வி**
ஆனந்தபவனம்
14, உவர்மலை
திருகோணமலை

158. **ஆ. சிவலோகநாதன்**
57, தபால் நிலைய வீதி
திருகோணமலை

159. **ஹமிலா ஏ. றகுமான்**
255, அம்பலான்துவ
பாணந்துறை

160. **எஸ். கே. ஏ. தேவராசன்**
ஆசிரியர்: சங்கொலி
நெடுந்தீவு மேற்கு - 1

161. **வடகோவை வரதராஜன்**
பூம்பொழில்
கோப்பாய்

162. **கந்தையா சத்தியநாதன்**
24/5/ 59 வதுலேன்
கொழும்பு -6

163. **ஆர். டி. இரத்தினசிங்கம்**
207, பருத்தித்துறை வீதி,
நல்லூர்

164. **எஸ். கே. குலநாயகம்**
3-4, இன்டஸ்ரியல் எஸ்ரேட்
அச்சுவேலி

165. **செல்வி ரஞ்சினி ராஜரட்ணம்**
குறுமன்வெளி
களுவாஞ்சிக்குடி

166. **டி. விஜயநாயகம்**
46 ஏ, லோறிஸ் இடம்
கொழும்பு - 4

167. **சிறிசாந்தன் வி. ஞானப்பிரகாசம்**
5, கொத்தலாவலை இடம்
கொழும்பு - 4

168. **கரவையூர் ஜே. வரதராஜா**
62/15 டோசன் வீதி
கொழும்பு - 2

169. **சிங்கைத்திவாகரன்**
திருமகள் இல்லம்
புலோலி

170. **கே. செல்லத்தம்பி**
திருப்பழுகாமம்
பெரியபோரதீவு

171. **எஸ். குணரத்தினம்**
11/1, சினதா வீதி
திருகோணமலை

(2 ம் பக்கத்தொடர்ச்சி)

## உறைக்கும் கவிதைகள்!

புரட்டாதி இதழின் அட்டைப்படம் என்னைக் கவர்ந்தது. எந்த அம்சமும் சோடைபோகவில்லை. 'அரி'யாரின் கதாநாயகன் உண்மையில் ஆயிரம் அவதார புருஷர்தான். கவிதைகள் இனிக்கின்றன - மன்னிக்கவும் உறைக்கின்றன, கே. ஆர். டேவிற் பேட்டி அச்சா - அண்ணுவின் நினைவு நாள் கட்டுரை ஒரு வரலாறு. அதை அளித்தவருக்கு உளங்கனிந்த நன்றி.

மா. வில்வக்கோன்.
அச்சுவேலி வடக்கு.

## பழைய பல்லவி!

அரியின் 'மனம்விட்டு சிலவார்த்தை" களின்...... ஸ்ரீ 'ஜெயவர்தனீஸ்வரரின் இறுதி அவதாரம் இதுவாக வாழி - த. பிரியாவின் " வழிகாட்டிகள் " இல்.. ...... இருபத்தொரு வருட வாழ்வில் தன்கணவனைத் திருத்த முடியாத அந்த தாய்மை பெண்மையின் தன்மைகளிலிருந்து ஒருபடி குறையத்தான். மங்கை" யின் 'மீட்டாத சில வீணைகள் " இல் ...... கருதன் கற்பனைச் சுயவுருதானெனினும் " கருவின் கரு " பழைய பல்லவிதான். மு. கு. ரெத்தினத்தின் " நிறம் மாறுகின்ற நீலவானம்" த்தில்..... ... பெண்மையின் பலமே பலவீனம் ஆகின்றது. (உண்மை)

மா. இராஜலிங்கம். அக்கரைப்பபற்று.

## ஆறுண்டுப் பணி அளப்பரியது!

ஈழத்தின் இலக்கிய வரலாற்றிலே அசைக்க முடியாத ஓர் இடத்தைச் சுடர் பிடித்து விட்டது. இந்தியச் சஞ்சிகைகளின் போலி வேடத்தை முறியடித்து முன்நிற்கிறது தங்கள் சுடர். ஆண்முண்டு காலமாக தாங்கள் ஆற்றிவரும் இலக்கிய பணி என்னை மிகவும் பெருமையடையச் செய்கிறது.

தமிழ்த்தேனி. சுழிபுரம்.

## சுவைப் பழங்கள்!

புரட்டாதி சுடரிதழ் கண்டேன்.
புரட்ட, புரட்ட இன்பம், இன்பம்.
'கவிச்சரங்கள்" சுவைப் பழங்கள்.
" நகைச்சுவைகள் " தனிச் சுவைதான்.
" மனம் விட்டு... " தந்த " பதில்கள், "
" சிறுகதைகள் " இவைகூட,
சுவையான் கனிகள் தான்.

கலஹாநகர் ஜெனிப்ரியா;

## அக்கரைக்கும் இடமளியுங்கள்!

நெல்லை எழிலன், கருமலைத் தமிழாழன் ஆகியோரின் இரண்டு கவிதைகளுமே அருமையாய் இருந்தன. தொடர்ந்து இவைபோலும் அக்கரைப்படைப்புக்களுக்கு இடம் கொடுங்கள். தமிழ்ப்பிரியாவின் வழிகாட்டிகள், மங்கை - கங்காதரத்தின் மீட்டாத சில வீணைகள், முத்துகுணரெத்தினத்தின் நிறம் மாறுகின்ற நீலவானம் — மூன்று சிறுகதைகளுமே முத்துக்கள். ச. புஸ்பகுமாரின் " அக்கா எரிகின்ரு ", மண்டை தீவு கலைச்செல்வியின் " நாமும் அகதிகள் " பூபால் கதிரவேலுவின் " நிறம் மாருத புஷ்பங்கள் " புதுக்கவிதைகள் பாராட்டத்தக்கவை. கரிகாலன் பதில்கள் நினைத்து நினைத்து அனுபவித்துச் சுவைக்கத் தக்கவை.

அனலை - ஆறு. இராசேந்திரம்.

## வாழிய ஒளிச் சுடர்!

வாழிய ஒளிச் சுடர் வாழிய ஒளிச் சுடர்
வளர் பிறை போல் இ(ன்)னும் வாழியவே
ஆழி சூழ் வையக மீதினிலே தமிழ்
அன்பர்கள் இன்புற வாழியவே.

தேடி நீ சென்றிடு நற்சுடரே நின்
தேவையெல்லாம் நிறை வேற்றிடவே
நாடி நீ சென்றிடு நற்றமிழர் மனை
நல்லவர் வாழ்த்தி நயந்திடவே.

செல்வி. அமுதா இராமநாதர்.
யாழ். பல்கலைக்கழகம்.

## ஆடி அசைந்து வரவேண்டாம்!

இலக்கியத்தையும் அரசியலையும் ஒன்ருக வாரி வழங்கும் சுடர் ஆடி அசைந்து அன்ன நடை போடாமல் விரைவாக வெளிவர வேண்டும். இளைய தலைமுறைக்கு களம் அமைத்துக் கொடுக்கும் சுடரில் பல புதிய விடயங்களையும் சேர்த்துக்கொண்டால் நன்ருக இருக்கும். 'அரி' மனம்விட்டுச் சில வார்த்தைகள் மூலம் ஜே. ஆர். இன் கபட நாடகத்தை மக்களுக்கு எடுத்துக் காட்டி இருக்கிருர்.

வன்னியூர் எஸ். ஆனந்தன்.
கனகராயன்குளம்.

## மாணவ மணிகளே!

உங்கள் சீருடைகளை துரிதமாகவும்
மேலும் பிரகாசமாகவும் சலவை செய்ய
"மில்க்வைற் சலவைப்பவுடரை"
வாங்கி உபயோகியுங்கள்.

மேலுறைகளை சேகரித்து அனுப்பி
மில்க்வைற் அப்பியாசக் கொப்பியையும்,
அறிவு நூல்களையும், மில்க்வைற் செய்தியையும்,
மற்றும் பெறுமதி வாய்ந்த பரிசுகளையும்
பெற்றுக் கொள்ளுங்கள்.

**"மில்க்வைற்"**

த. பெ. எண், 77, யாழ்ப்பாணம்,
தொலை பேசி: 7233





## "சுடர்" நண்பர் வட்டம்

சுடர் வட்டம் மூலம் இலக்கிய நண்பர்—நண்பிகளுடன் தொடர்பு கொள்ள விரும்புபவர்கள் கீழ்க்காணும் விலாசத்தை அஞ்சலட்டையில் ஒட்டி அனுப்பிவைக்கலாம். தெளிவான விலாசத்துடன் தங்கள் பொழுது போக்கு விபரக்குறிப்புகளுடன் அஞ்சலட்டையில் ட்டுமே அனுப்பிவை வேண்டும்.

**சுடர் நண்பர் வட்டம்**
194ஏ, பண்டாரநாயக்க வீதி,
கொழும்பு — 12.

## 'சுடர்' சந்தா விபரம்

ஆறு திங்கள் — 13-00
ஒரு ஆண்டு — 25-00
(தபாற்செலவு உட்பட)

நிர்வாகி அவர்கட்கு,

இத்துடன் அரை/ஒரு வருட சந்தா தொகையான ரூபா ...... க்கான மணி ஓடர்/போஸ்டல் ஓடரை அனுப்பி வைக்கிறேன். என்னையும் சந்தாதாரராக சேர்த்துக் கொள்ளும்படி வேண்டுகிறேன்.

முழுப்பெயர்: ......

விலாசம்: ......

......

நிர்வாகி,
சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்,
194ஏ, பண்டாரநாயக்க வீதி,
கொழும்பு—12.





இச்சஞ்சிகை 194 ஏ, பண்டாரநாயக்க மாவத்தை கொழும்பு—12 இல் உள்ள
சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டாரால் அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.